# கலைச்செல்வி



KALAICHELVI ★ விலை 35 சதம்

தீபாவளி சிறப்பிதழ்

* இன்றைய பீடி யானை பீடி *

யானை பீடி ஸ்பெஷல்

ஏனெனில் அது:

★ இன்பம் ★ இதம்

★ சுகம் ★ சுவை

தரும் பீடி.




சுறுசுறுப்பை

சுவையோடு தரும்

யானை பீடி மக்கள் பீடி

யானை பீடி ஸ்பெஷல்

* போன்: 7651 *

## யானை பீடிக் கம்பனி

62, மெசஞ்சர் வீதி, கொழும்பு.

1966

8 - 7


*For Lifelike Portraits*

# SELLAMS



## செல்லம்ஸ்

**கவர்ச்சியான படங்கள் பிடிக்க ஏற்ற ஸ்டுடியோ**

போன்: 436. யாழ்ப்பாணம்.

GERMAN MADE

# Sonnenschein
## BATTERIES

*Northern Province Agent:*

# THURAI & CO.

23, Stanley Road, JAFFNA.

---

## எம். ஜி. ஆர். மோதிரங்கள் !

JEWELS

விற்பனையாகின்றன.

கண்கவரும் புதுமையான நகைகள்

என்றும்

நியாய விலையிற் கிடைக்கும்.

# பி.வி.எஸ். நாதன் சகோதரர்கள்

137, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

லாலா
லாலா
லாலா
லாலா
லாலா
லாலா
லாலா
லாலா
லாலா
லாலா
லாலா
லாலா
லாலா
லாலா
லாலா
லாலா
லாலா
லாலா
லாலா
லாலா
லாலா
லாலா
லாலா

தோற்றப் பொலிவைத் தருவது
ஆடை
ஆடைக்குப் பொலிவைத்தருவது
லாலா

★ லாலா என்பதே
★ இன்றைய சோப்

சோப் என்று கேட்காதீர்கள்

# லாலா

என்றே கேளுங்கள்.

★ லாலா என்றால்
★ சிக்கனமான சோப்

உங்கள் தேவைக்கு எழுதுங்கள்:

லாலா சோப் தொழிற்சாலை
அச்சுவேலி.




**கண்படுமோ?**

பத்திரிகைகளின் கைங்கரியத்தைப் பற்றி தங்களின் தலையங்கம் நன்று. அத்தலையங்கம் நம் நாட்டுப் பத்திராதிபர்கள் கண்களிற் பட்டு கருத்தினை மாற்றிக் கொள்ளச் செய்யுமா?

ஏ. பி. வி. கோமஸ்
எட்டியாந்தோட்டை.

**மணிக்கந்தன்.**

குடும்ப விளக்கு ஏற்றும் அக்காவுக்கு என் பாராட்டுகள். இ. வைத்தியலிங்கம் அவர்களின் 'நல்லூர்க் கந்தன்' பற்றிய கட்டுரை மலருக்கு மணிமகுடமாயுளது.

ஸ்பிரிங்வல்லி. இரா. சரசுவதி

**அவசரக் குரல்!**

இனிய தமிழை, எளிய நடையை, அழகிய கதையை, 'அன்பின் குரலை' மீண்டும் மீண்டும் கேட்டுக்கொண்டிருக்கவேண்டும் போலிருக்கிறதே, ஏன் இந்த அவசரம் ''சிற்பி''க்கு?

நீர்கொழும்பு. ஞா. மங்கை

**தீப உலகம்.**

'மாணவர் உலகம்' இவ்வளவு அருமையாகப் பிரகாசிக்கும் என்று கனவிலும் எண்ணவில்லை. அது இன்னும் குன்றின்மேல் தீபமாய் ஒளிர வேண்டும்.

வேலணை. 'சிந்தனைச் செல்வன்'

**ராஜகணிப்பு.**

''ராஜரிஷி''யின் சாதகக் குறிப்பு பார்த்தேன். சபாஷ்! நான் பிறந்த புரட்டாதி மாதம் நல்லது என்பதற்காகவல்ல; உண்மைக்கணிப்பிற்காகத்தான்.

கி. வ. ஜ. பற்றியது சரியான பதில். பாரதிக்கு விழா ஏன்? வள்ளுவனைப் புகழ்வதேன். கற்றாரைக் கற்றாரே காமுறுவர், ஆமாம்!

அடம்பன். எஸ். இராஜம்

**பெரி—யம்மா.**

'சின்னம்மா' கதையின் முடிவு சிறந்தது. காதலை எண்ணி அவள் அப்படிச் செய்யவில்லை, பெண்மையை நினைந்தே அப்படிச் செய்தாள். பெரி. சண்முகநாதனுக்கு என் பாராட்டுக்கள்.

யாழ்ப்பாணம், ஒரு ரசிகை

**ஒரே பார்வை**

கவிதைகள், கட்டுரைகள், கதைகள், நாவல், குறுநாவல், இலக்கியப் பகுதிகள் என்று எல்லாமே தரமான விஷயங்கள். சாந்தனின் 'பார்வை' எனக்கு மிகவும் பிடித்துக்கொண்டது.

கொழும்பு. சிவச்சந்திரன்,

# வேந்தனார் பரிசு

தமிழுக்கு அமிழ்தென்று பேர்.

தமிழ், தமிழ், தமிழ் என்று சொல்லிக்கொண்டேயிருந்தால் அது அமிழ்து, அமிழ்து, அமிழ்து என்று ஒலித்துக் கொண்டேயிருக்கும்.

'அம்மா' என்று அழைத்த நாள் தொடக்கம், 'அறிஞர்' என்று அழைக்கப்பட்டு அனைவராலும் அங்கீகரிக்கப்பட்ட பின்னரும்கூட இந்த அமிழ்தத்தை அள்ளி உண்டுவந்தவர் வித்துவான் வேந்தனார் அவர்கள். ஆகவே அவர் அமரர்; அவருக்குச் சாவில்லை. தமிழ் நெஞ்சங்களில் தனி வேந்தனாய் அவர் ஆட்சி செய்துகொண்டேயிருப்பார்.

என்றுமே இருப்பவருக்கு நினைவுச் சின்னம் வேண்டியதில்லை.

கலைச்செல்வி

கலை: 8.
காட்சி: 7.

ஆனால், பயன் மிக்க சொற்பொழிவுகளாலும் நயம் மிக்க கவிதைகளாலும் பல்லாயிரக் கணக்கானவர்கட்குத் தமிழ்ச் சுவையூட்டிய அன்னாருக்கு நமது நன்றியைத் தெரிவிக்க வேண்டுமல்லவா?

"வேந்தனார் பரிசு நிதி" ஒன்று திரட்டப்படல் வேண்டும். அகில இலங்கையிலுமுள்ள மாணவர்கட் கிடையே ஆண்டு தோறும் மிகச் சிறந்த "தமிழ் இலக்கிய மாணவன்" தெரிவு செய்யப்பட்டு, "வேந்தனார் பரிசு" வழங்கப்படல் வேண்டும்.

தமிழ் நெஞ்சங்களின் சிந்தனைக்கு இந்த ஆலோசனையைச் சமர்ப்பிக்கின்றோம்.

தமிழ்ப் பணிக்கு நன்றி தெரிவித்து நம்மை நாமே கௌரவித்துக் கொள்வோம்.

# இலக்கியச் சந்திப்பு!

★

தமிழகத்தின் இலக்கிய ஏடான ''தீபம்'' பத்திரிகையின் ஆசிரியர் திரு. நா. பார்த்தசாரதி (மணிவண்ணன்) சமீபத்தில் யாழ்நகர் வந்தார். இலக்கியத் துடிப்பும், இலட்சியத் துடிப்பும் மிக்க நா. பா. தரமான எழுத்தாளர்களை கௌரவிக்கும் பண்பாளர். 'ஈழத்தின் இலக்கியங்களுக்கு நான் ஆக்கபூர்வமாக எவ்வளவோ செய்யக் காத்திருக்கிறேன்' என்று கூறிச் சென்றூர் அவர். அதற்குச் சான்ருக இதோ எமது பேட்டிக் கேள்விகளுக்குத் தமிழகத்திலிருந்தே எழுதியனுப்பியவற்றைத் தருகின்ருேம்:

கே: தமிழகப் பத்திரிகைகள் ஈழத்து நூல்களை விமர்சிக்காதது ஏன்?

ப: சரஸ்வதி, தாமரை, தீபம் போன்ற பத்திரிகைகள் ஈழத்து நூல்களுக்கு விமர்சனம் செய்கின்றன. நான் கல்கியிலிருந்த போது சில விமர்சனங்களை ஈழத்து நூல்களுக்குச் செய்திருக்கின்றேன். ஈழத்து நூல்களுக்கு விமர்சனமே செய்யாத பிற பத்திரிகைகளுக்கு அது தவறு என்பதை உணர்த்த வேண்டும்.

கே: பத்திரிகைகள் நடத்தும் போட்டிகளால் இலக்கியம் வளருமா?

ப: பத்திரிகைகள் நடத்தும் போட்டிகளால் பெரும்பாலும் நல்ல விளைவுகளோ இலக்கிய முற்னேற்றமோ ஏற்படுவதில்லை என்பது என் கருத்து. முன்பு குறுக்

## மணிவண்ணன்

கெழுத்துப் போட்டி நடத்தியவர்கள் சட்டப்படி அதை இப்போது நடத்த முடியாததால் இலக்கியப் போட்டி நடத்துகிருர்கள். போட்டி நடத்துகிறவர்களுக்கோ அதன் நீதிபதிகளுக்கோ இலக்கிய உலகுடன் அதிகம் தொடர்பிருப்பதில்லை. பத்தாயிரம் ரூபாய்ப் போட்டி இருபதினுயிரம் ரூபாய்ப்போட்டி என்று சொல்வதிலிருந்தே ரூபாய்ப் போட்டிதானே ஒழிய இலக்கியப் போட்டி அல்ல என்பதுதெளிவாகிவிடுகிறது. சமீபத்

தில் ஒரு பத்திரிகையின் வெள்ளி விழாப் போட்டியில் பரிசு பெற்ற ஒரு கதை அதற்குச் சில மாதங்களுக்கு முன் சாதாரணப் பிரசுரத்துக்குக்கூட ஏற்கப் படாமல் 'தாமரை' என்ற பத்திரிகையால் புறக்கணிக்கப்பட்டது என்றஉண்மையும், ஆனந்த விகடன் நாடகப் பொட்டியில் பரிசு பெற்ற நாடகம் திருட்டு நாடகம் என்று நீதிமன்றம் தீர்ப்பு வழங்கிய உண்மையும் போதுமே போட்டிகளின் தார்மீகத் தோல்வியை நிரூபிக்க.


கே: உலக மொழிகளில் வரத்தக்க தமிழ் நாட்டுக் கதாசிரியர்களில் சிலரைக் கூறமுடியுமா?

ப: தி. ஞானகிராமன், கு. அழகிரிசாமி, ஜெயகாந்தன் லா. ச. ரா ஆகியோரது கதைகள் உலக மொழிகள் சிலவற்றில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

கே: ஈழத்துக்குத் தரங்கெட்ட பத்திரிகைகளை அனுப்பாமலிருக்க நீங்கள் ஏன் ஒரு இயக்கம் நடத்தலாகாது?

ப: தரங்கெட்ட பத்திரிகைகளைப் புறக்கணிக்கும் துணிவு

பேட்டி



மணிவண்ணன்

வாசகர்களுக்குத்தான் வேண்டும். வாசகர்களின் ஒற்றுமையே இதற்குப் பயன்படும்.


ஈற்றில் அவர்மன நிறைவோடு இப்படிச் சொல்கிறார்:

'கலைச் செல்வி' தரமான பத்திரிகை. கலைச்செல்வியைத் தவருமல் படிப்பவன் நான். அது பிடிவாதமாகவும், நன்ருகவும் தமிழ்ப் பணி புரிகிறது. அதை எல்லாரும் வாங்கிப் படித்து ஆதரிக்க வேண்டும். நல்ல வாசகர்கள் ஆதரித்தால்தான் நல்ல பத்திரிகைகள் வளரும். கலைச் செல்வி வளர்க! வாழ்க!

# வேந்தனாரை நினைந்து

ஈழத்தின் சிறந்த தமிழ்க் கல்விமானாகவும், உயரிய சொற்பொழிவாளனாகவும், ஒப்பற்ற கவிஞனாகவும் விளங்கி காலத்தோடொட்டிய புதுமைக் கலைஞனாகத் தொண்டாற்றிய சிவநெறிக்காவலன் — நாவலன் வழி வந்த பெருமைக்குரியவர் வேந்தனார்.

படிப்பிக்கும்போதே இலக்கியப் பாத்திரங்களுடன் மாணவர்களை இணையச் செய்யும் இலட்சியப் பற்றுடன் வாழத் தூண்டிய பேராசான் அவர். மாணவர்இதயமறிந்து அவ ராக்கிய குழந்தைக் கவிதைகள் எத்தனையோ.



வேந்தனாரின் பேனா பற்றிய கரத்தைப்போற்றியவர்கள் தமிழ் கூறும் நல்லுலகில் கணக்கற்றோர்.

நல்ல, இனிய, எளிய நற்றமிழ் நடையினாலும், பாவன்மை சான்ற தெய்வப் பனுவலாலும், மக்களிட மிருந்து தன் புலமைக்குப் பெற்ற புகழுரைகள் ஏராளம்! ஏராளம்!

ஈழத்தில் மேடைப் பேச்சுத் துறையில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தி, மக்களுக்கும் தமிழபிமானமூட்டி, அறிஞர் அண்ணா போன்ற பெருமக்கள் பலருடன் ஒரே மேடையில் உரையாற்றி ஈழத்தின் புகழை மேடையில் ஏற்றியவர்.

புதுமைப் பாவலரின் கருத்துக்களை அடிக்கடி மேற்கோள் காட்டிப் பேசுவார். நேர்மையே குறிக்கோள் என வாழ்ந்தவராதலினால் பிடிக்காத எதையும் கண்டிக்கும் வலிமை மிக்கவரும்கூட.

ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்கு வேந்தனார் செய்த சேவை அமரத்துவ மானது. அவரும் இன்று அமரராகி விட்டார்.

சாகித்திய மண்டலத்தில் தன் ''கவிதைப் பூம் பொழில்'' பதிவாக வேண்டும் என்ற நேர்மையான ஆசை அவரிட மிருந்தது. அது நிறைவேற வேண்டும்.

வேந்தனார் தன் உள்ளத்தால் வாழ்ந்தவர். எம் உள்ளத்திலும் என்றென்றும் வாழ்வார்.

— யாழ்வாணன்

# தியான சாதனம்

கவியோகி சுத்தானந்தபாரதியார்

## 3. நான்

இந்த உடலில், "நான் நான்" என்று மார் தட்டிப் பேசுவது யார்? தோலா, எலும்பா, சதையா, நரம்பா, வாயா, வயிறு? இல்லையே! இந்த உடல் உறங்கும்போது மூச்சு விடுவது யார்? கனவு காண்பது யார்? எத்தனையோ நினைவுப் படலங்கள் கனவில் வந்து ஆடுகின்றனவே, அவற்றைக் காண்பது யார்? மனமா? மனமிறந்த சமாதியில் உள்ளின்பத்தை உணர்வது யார்? "நான் இன்புற்றேன்" என்பது யார்? ஆழ்ந்து பார்த்தால் 'நான்' என்பதும் சுத்த சக்தி மயமான நீயே. பரமாத்மனே, நான் நான் என்னும்போது "நீ நீ" என்றுணர்ந்து நினக்கே இந்த உடல், உயிர், மனம், உள்ளம்—எல்லாம் ஊனுக அருள்புரிவாயாக!

## 4. அதிகாலையில்

அதிகாலை மந்தமாருதத்தில் கண்ணன் குழலோசை நீந்தி வருகிறது. நட்சத்திரங்கள் தங்கள் புன்னகையை மலர்களுக்கு அளித்து, ஒளியில் மறைகின்றன. சோலை மரங்கள், தோகை விரித்த மயில்கள் போல் விளங்குகின்றன, வேல் முருகன், அங்கே மலரணி கொண்டு பொலிகின்றான். மலைகள் சிவலிங்கமாக விளங்குகின்றன. அருவிகள் ஓம் என்று வேத யாழ் இசைக்கின்றன. புட்கள் சிவ சிவ "ஹர ஹர" என்று நாமாவளி பாடுகின்றன. சூரியன் கற்பூர ஜோதியாக விளங்குகிறது. எல்லையற்ற வான் சூழ்ந்த இயற்கைக் கோவிலில், உன் அழகைக் காணக்காண என் உள்ளம் காதலால் பூரிக்கிறது. பேச்சற்ற தியானக் கவிகளால் உன்னுடன் கூடிக் குழைகிறேன், பரமாத்மனே...! எனக்கெனக் கோவில் எதற்கு? ஆசிரமம் எதற்கு? உலகக் கோவிலில் இயற்கை யெழிலில் நீ ஒளிர்வதைக் கண்ட பிறகு, சாதி மதக்கோவில் மறைந்தது, குருக்கள் மறைந்தார். நானும் நீயும் இந்த உலகக் கோவிலில் ஒரே நெஞ்சத் துடிப்பில் பேசுகின்றோம்.

# இந்த மாதத்தில் பிறந்தவர்களுக்கு

"ரா ஜ ரி ஷி"

இரண்டாம் ஜோர்ஜ் மன்னர், மூன்றும் பிரடரிக், ஒஸ்கார் வைல்ட், மார்டின் லூதர், பெறடே முதலிய பெருமக்கள் பிறந்த மாதமே இந்த ஐப்பசி.

இந்த மாதத்தில் பிறந்தவர்கள் மனேபலம் மிக்கவர்கள். எனவே இவர்களின் எண்ணங்களிலும் நடவடிக்கைகளிலும் எப்போதும் உறுதியும் முடிவான தீர்மானமும் இருக்கும்.

ஐப்பசியை வைதீகர்களின் — தத்துவ ஞானிகளின் — மாதம் என்றேகூடக் கூறிவிடலாம். தாங்கள் நம்பும் உண்மை ஒளியே தங்களின் ஆத்ம சக்திகளையெல்லாம் நடாத்துகிறதென்று இவர்கள் நம்புவார்கள்.

சிலர் பெரிய ஸ்தாபனங்களிலோ அல்லது வர்த்தகர்களாகவோ இருக்கலாம். ஆனல் இவர்கள் பணத்தைப் பொருட்படுத்த மாட்டார்கள். எனவேதான் போலும் பெரும்பாலானவர்களின் வாழ்க்கை நிலை ஏற்ற இறக்கமாகவே மாற ஏதுவாகிறது.

ஐப்பசி மாதத்தின் குணங்களெல்லாம் சரிவரக் கொண்ட ஒருவரென்றல் அவரை ஒரு தராசுக்கு ஒப்பிடலாம். ஏனெனில் எதையுமே இவர்கள் நடுநிலையோடு சீர்தூக்கி நல்ல தீர்ப்பையே வேண்டுபவர்கள்.

பெரும்பாலானவர்கள் சட்டங்களைப் பற்றி ஆராயவே விரும்புபவர்களாவர். இதன் பயனுகத்தான் ஐப்பசி மாதத்தவர்களை நாம் நீதிபதிகளாகவும், சட்ட வல்லுனர்களாகவும், அப்புக்காத்துகளாகவும் காண முடிகிறது.

எல்லாருமே அறிவு பூர்வமானதைத்தான் விரும்புவார்கள். இதனல் எது சரி எது பிழை என்ற கேள்வி பிறந்து இவர்களிடையே ஒரு ஆராய்ச்சி மனப்பான்மை ஏற்படுத்திவிடுவதால் கைதேர்ந்த டாக்டர்களையும் இம்மாதம் உருவாக்குகிறது.

எவ்விதத்திலேனும் இவர்களுக்குப் படிப்பின் மீது கவர்ச்சி ஏற்பட்டுவிடுதலால் ஆழ்ந்த நோக்கு படிந்து அவர் விரும்புவது

எத்தொழிலாயினும் அதற்கே அவர் பொருத்தமானவராகிவிடுவார்.

இம்மாதத்தவரின் ஒரே குறை இல்லறத்தில் திருப்தியிராததுதான். பொருத்தமான திருமணம் மிக அபூர்வம். காதல் என்பது ஒரு மாயையயாகவே இவர்களுக்கிருக்கும். இதனுல்தான் போலும் இவர்கள் நிறைய நண்பர்களை ஏற்படுத்திக் கொள்கிறுர்கள். அவர்களெல்லாரையும் திருப்திப்படுத்தவும், ஆதரிக்கவும் என்றும் இவர்கள் பின் நிற்பதில்லை.

சிலருக்கு நரம்புத் தளர்ச்சி, 'ஆவி'களில் தொல்லை ஏற்படுவதுண்டு.

சில பெண்களுக்கு அந்தரங்க உறுப்புகள் பாதிக்கப்படலாம். இதனுல் கடுமையான ஆபரேஷனுக்குக்கூட ஆளாக நேரிடுகிறது. இதனுல் கவலைகொள்ளத் தேவையில்லை. ஏனெனில் வேறு பலன்களால் இவை ஏற்படாமலே இருப்பவர்கள் மிகப் பலர். ●


# குறிஞ்சி மலர்

'கலைச் செல்வி'

கார்த்திகை இதழ் குறிஞ்சி மலராகத் தயாராகிறது.

அற்புதமாக உருவாகும் இம்மலரில்

- தெளிவத்தை ஜோசப்
- தமிழோவியன்
- என். எஸ். எம் ராமையா
- இர. சிவலிங்கம்
- ஏ. பி. வி. கோமஸ்
- ஈழக்குமார்


இன்னும் பலரும் எழுதுகிறுர்கள்.




பி. டி. ராஜனின்
விசேட பேட்டி.

ஏராளமான பக்கங்கள்

விலை 75 சதம்




ஈழத்தைப் பொறுத்தவரை இவ்வாண்டினைப் பத்திரிகை யுகம் எனக் குறிப்பிடுவதில் தவறில்லை. தெருவெங்கும் வரப்போகும் புதிய புதிய பத்திரிகைகளின் விளம்பரங்கள்; சுவரொட்டிகள் அவற்றின் விஸ்தாரமான தம்பட்டமான விளம்பரங்களைக் கவனிக்கும்போது வாசகர் உள்ளம் குதூகலித்து நின்றது.

நல்ல இலக்கியப் பிரியர் மனமும்—, ''இனி நமக் கென்ன குறை. நம் நாட்டிலேயே நல்ல தரமான பத்திரிகைகள் தோன்றப் போகின்றன. இனித் தமிழகத்தை இலக்கியத்திற்காக நம்பி இருக்கவேண்டிய தில்லை!'' —என எண்ணியதுடன், ஒரு காலத்தில் அமெரிக்காவுக்கு இங்கிலாந்திலிருந்து இலக்கிய இறக்குமதி நடந்ததும், பின்னர் அமெரிக்காவில் ஏற்பட்ட தேசிய உணர்ச்சியினால், அமெரிக்காவிலேயே புத்தம் புதிய இலக்கிய மலர்கள் மலர்ந்து மணம் வீசிய தோடமையாது, இங்கிலாந்தையே வெற்றி கொண்ட நிலையில் உலக இலக்கிய அரங்கில் உன்னத இடம் வகிப்பதையும் — நம்நாட்டு இலக்கிய வுணர்வுடன் இணைத்துப் பார்த்து மகிழ்ந்தது. அவர்களின் கற்பனை எந்தளவுக்கு நிறைவேறியது—?

'புலி வருகிறது! புலி வருகிறது!'—என்று **புலிகளே வந்துவிட்டன.**

திருவாளர் இலக்கியப் பிரியர் கைநிறையப் பத்திரிகைகளுடன் வந்து அமர்ந்து ஒவ்வொன்றாகப் பூரிப்புடன் புரட்டிப் பார்க்கிறார்.

முதல் பிரதி அல்லவா? முதல் குழந்தை யல்லவா?

மேல் நோட்டமாகப் பார்வையிட்ட அவர் முகம் சுருங்குகின்றது. மலர்ச்சி குன்றுகிறது. ஏமாற்றம் கவிகிறது.

'இவ்வளவு தானா? இதற்கா இவ்வளவு ஆர்ப்பாட்டம்!'

'முதல் பிரதியைக் கொண்டு முடிவு செய்யக் கூடாது. ஆசிரிய தலையங்கத்தைப் படியும். இனி வரப்போகும் இதழ்களைப் பற்றியும், பத்திரிகையின் நோக்

கம் பற்றியும் இருக்கும்!' என்கிறார் திரு. வாசகர்.

ஆ! என்ன ஏமாற்றம்! சினிமாக்காரிகளின் தினசரி நடவடிக்கைபோல—'நான் காலையில் முட்டைக் கோப்பி குடிப்பேன், இட்டலி சாப்பிடுவேன், பல் விளக்குவேன், முகத்திற்கு மாப் பூசுவேன், நாயைக் கொஞ்சுவேன்! என்று பேட்டி கொடுப்பதுபோல தலையங்கம் எழுதப்பட்டிருக்கின்றது.

இலக்கிய இரசிகர் மற்றப் பத்திரிகையைப் பிரிக்கிறார். அங்கு முந்தினதைவிடக் கேவலம். அடுத்த பத்திரிகை—

ஒரே வார்ப்புத்தான்.

மாதிரிக்குச் சில இங்கே.

**'பனைமரம்'**—என்ற பத்திரிகையின் முதலிதழ் தலையங்கம் இது—

'பனை + மரம்' = பனைமரம். பனை என்பது ஒரு வகைத் தாவரம். அது மரம் போல் வளர்வதால் பனை மரம் என்றழைக்கப்படுகிறது. இது நீண்டு நிமிர்ந்து வளரும். இது பல பயனையும் அளிப்பதால் கர்ப்பக தரு என்றழைப்பர். இதனடியிலே தமிழர் கலாசாரம் மிக ஓங்கி வளர்ந்ததாகத் தொல்பொருள் ஆராய்ச்சியாளர் துணிபு. ஆதலால் நமது புத்தம் புதிதாம் தமிழ்ப் பத்திரிகைக்குப் பனைமரம் என்று பெயரிட்டமை மிகப் பொருத்தமே. இந்தப் பெயரிட்டதிலேயே நம் பத்திரிகையின் பெருமை உங்களுக்குப் புலனாகும். இனி நமது பனை மரத்தைப் பின்பற்றியே பல மரங்கள் இல்லை இல்லை... பத்திரிகைகள் தோன்றப் போகின்றன.

**'அக்னி'** — பத்திரிகையின் முதலிதழ் தலையங்கம் இது—

'அக்னி !' — அக்கினி என்றால் தீ — தீயென்றால் நெருப்பு. இந்த நெருப்பு மனித சமுதாயத்திற்குத் தொன்று தொட்டுப் பலனளித்து வந்துள்ளது. நெருப்பால் பல சாம்ராஜ்யங்கள் அழிந்துள்ளன. பல சாம்ராஜ்யங்கள் தோன்றியுள்ளன. நெருப்பால் வீட்டையும் கொழுத்தலாம்...சோறும் காய்ச்சலாம். வயிறார உண்ணலாம். வாழ்க்கைக்கு வயிறே பிரதானம். வயிறு வளர்க்கச் சோறு அவசியம். சோறு சமைக்க நெருப்பு... அதுதான் அக்னி அவசியம். அந்த அக்னிதான் நமது பத்திரிகை.

**'வழுக்கல் நிலம்!'**—பத்திரிகையின் தலையங்கம் இது.

'வழுக்கல் நிலம்' — ஆஹா! என்ன அழகான தலைப்பு எங்கள் பத்திரிகைக்கு. இதனைக் கண்டு பிடிக்க நாம் பட்டபாடு. பலர் பல பெயர்கள் சொன்னார்கள் தண்டவாளம் முருகேசு 'மோகினி' என்று பெயர் சொன்னார், அலவாங்கு வேலுப்பிள்ளை 'முருங்கக்காய்' என்று பெயர்

சொன்னுர். சைக்கிள் கடை தம்பிராசா 'செந்தலை' என்ருர். ஒன்றும் ஏற்றுக் கொள்ளப்பட வில்லை. கடைசியாக ஏகமன தாக 'வழுக்கு நிலம்' தெரிவு செய்யப்பட்டது. பத்திரிகைக் கருத்துக்களும் வழுக்கு நிலக் கருத்துக்களாகவே இருக்கும்.

—திருவாளர் இலக்கியப் பிரியரும், வாசகரும் சில விநாடி கள் மூடமாய், செவிடாய், குருடாய் நிற்கின்றனர்.

ஒரு பத்திரிகை தோன்றினுல் — அது ஏன் தோன்றுகின்றது? அதன் நோக்க மென்ன? எதற் காகப் பாடுபடப் போகிறது? என்பதனை விளக்கவே, பொறுப் பான ஆசிரியத் தலையங்கங்கள் எழுதவோ ஆற்றலில்லாதவர் களா நம்நாட்டு கலை, கலாச் சாரம், அரசியல், இலக்கியம் ஆகியனவற்றை வளர்க்கப் போகிருர்கள்? — என்ற ஐயம் இயல்பாகவே வாசகர் மனதில் எழுந்துள்ளது.

தென்னிந்தியப் பத்திரிகை களுக்கு எதிராகக் கோஷம் எழுந் துள்ளஇவ்வேளையில் சில பத் திரிகைகள் தென்னிந்திய எழுத் தாளர்களுக்கு அதி முக்கியத் துவம்கொடுக்கின்றன. அவர்கள் படைப்புகளும் பணத்திற்காக எழுதியதுபோல் தரமற்றவை யாகவும், தென்னிந்தியாவில் பிரசுரத்திற்கு ஏற்றுக்கொள்ளப் படாமல் நிராகரித்தவையாக வுமே யுள்ளன. இதனை யுணர்ந்து நம்நாட்டுப் பத்திரிகைகள் இனி யாவது தொழிற்பட வேண்டும்.

இன்று பல பத்திரிகைகள் தோன்றியதனுல் நல்விளைவுகட் குப் பதிலாகச் சில எதிர்மாறுன விளைவுகளை ஏற்படுத்தியுள்ளன. தங்கள் தங்கள் பத்திரிகைகளின் விற்பனையை அதிகரிக்கச் செய்வ தற்காகத் தங்களிடையே ஒரு கெடுபிடிப் போரை (Cold war) நடாத்திக் கொண்டிருக்கின்றன. இவர்களது கெடுபிடி யுத்தத் தின் ஏவுகணை என்ன தெரியுமா? அதுதான் சினிமா நட்சத்திரங் களின் ஆடை குறைந்த கவர்ச் சிப் படங்கள். தினசரியிலிருந்து வாரப் பத்திரிகை வரை கவர்ச் சிப் பட மயமே. அதற்கேற்ற தலைப்புகள். இதில்தான் பத் திரிகையாசிரியர்கள் தங்கள் ஊனை, உடலை உருக்கி உழைக் கிருர்கள். 'இச்!' முத்தம் இடு வேன், 'கட்டியணைப்பேன்!', 'நீச்சலுடையில் நடிக்கத்தயார்!' நடிகையான என் மேனியை 'நாலுபேர் பார்த்து ரசித்தால் தானே கலை வளரும்!' — இவை பெரிய தலைப்புக்கள். இவற் றைச் சொன்னவர்கள் சாதா ரண நட்சத்திரமாக இருக்க லாமா? அவர்களுக்கும் ஆசிரியர் பட்டம் வாங்குவார், 'கை படாத ரோஜா, கண்ணகி, தொடையழகி, வாலைக்குமரி, ஜில் ஜில் ரோஜா!, கவர்ச்சிக் கன்னி!' — அப்பாடா ஆசிரியரின் ஆத்மா சாபல்யமடைந்தது— இன்று நம் பத்திரிகை யுலகம் இப்படி இருக்கிறது.

வேசைப் பிழைப்பாகப் பத்தி ரிகையுலகு இருக்கக் கூடாது. வார்சகர்களே! இலக்கிய அன்பர் களே! இதுபோன்ற முயற்சிகளை எதிர்த்துப் போரிடுவதும், வெற்றி கொள்வதும் உங்கள் கையிலேயே உள்ளது.

# இலக்கியச் சித்திரம்

✻ பேரன்பு ✻ மு. கனகராசன் ✻

இனிய இதயங்கள் இரண்டைக் காணும்போது கரும்பு வேந்தனுக்கு எப்போதுமே நிகரற்ற ஆற்றல் வந்துவிடுகின்றதுதான்.

இதோ அவன் தன் காந்தர்வ வில்லை வளைத்துப் பொல்லாத நஞ்சையும், பொசுக்கும் நெருப்பையும் இணைத்தாற்போல கதகதப்பான மலர்களை எடுத்துத் தொடுத்துவிட்டான்...

செழிந்து அடர்ந்து வளர்ந்திருக்கின்றன கொடிகள். பச்சைப் பசேலென்ற அவற்றின் மதாளிப்பிற்றான் எத்தனை இதம்! கொடிகளின் நிழலில் ஒரு நாரை. அந்தப் பசுமை நிழலின் குளிர்ச்சி அதனை நடுங்கப்பண்ணுவதையும் பொருட்படுத்தாது அது நிற்பதேன்? ஆமாம்! தனியாகப் பிரிந்துபோயுள்ள தன் துணையின் வரவிற்காகத்தான் நிற்கிறது.

நறுமணம் அவிழ்க்கும் புன்னை மலர்க்காடு. திக்கெங்கும் சுகந்த மாருதம். எத்தனையோ சுந்தர நெஞ்சங்களை வருடி வருகிறது அம்மலய மாருதம். அந்தச் சுகானந்த வாசத்தைப் பரப்பவென்று அவிழ்கிறது ஒரு புன்னை மலர். உடனே வண்டொன்று வருகிறது, இதழ்களைப் பிரிக்கிறது, மகரந்தத்தைக் கோதுகிறது. தன் துணையைத் தேனுண்ணச் செய்து காதலோடு பார்த்திருக்கிறது அவ்வண்டு.

இப்படியெல்லாம் காதல் போற்றப்படுகின்ற இனிய தேசத்திலிருந்தாள் ஒரு இளங் கன்னிப் பெண். எழிற் பதுமை அவள். அந்தப் பேரழகி தன் பொக்கிஷத்தை ஒரு அறையிலிட்டு சக்தி மிக்க தாழ்கொண்டு பூட்டியும் வைத்தாள். ஒரு நாள் அத்தாழை அகற்ற நேர்ந்தது. ஏன் தெரியுமா?

அவள் ஒருவனைக் காதலித்தாள். காதலனின் கண்கள் கவர்ச்சி மிக்க கமலக்கண்கள். அக் காந்தர்வக் கண்களைத் தன் குவளையன்ன காந்தக் கண்களால் நோக்கினாள். அப்போதுதான் அந்த விழைவு.

அவளுள்ளம் அறை. அதன் பொக்கிசம் ஆசைகள். நிறைவு கதவம். அவற்றைக் காக்கும் தாழ் கற்பு. வைரமிக்க அத் தாழ் திறக்கும் ஆற்றல் பேரன்பு.

அப்பப்பா...

அன்பு! பேரன்பு! காதல்! ஈற்றில் உலகின் சுந்தரம்!

நீண்ட கமலத்தை
நீலக் கடைசென்று
தீண்டு மளவில் திறந்ததே—
பூண்டதோர்
அன்பின்றாழ் கூந்தலாள்
வேட்கை அகத்தடக்கிக்
கற்பின்றாழ் வீழ்ந்த கதவு.

— நளவெண்பா.

விமர்சனப் போட்டி

# கயமை மயக்கம்

விமர்சகர் : ஏ. பி. வி. கோமஸ்
நூல் : கயமை மயக்கம்
கிடைக்குமிடம் : 226, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

**[ஆவணி இதழில் விமர்சனத்திற்கு 'கயமை மயக்கம்' தொகுதியை அறிவித்திருந்தோம். அப்போட்டியில் பரிசுக்குரியதாக தெரிவு செய்யப்பட்ட இக்கட்டுரை முதலாவதாக இடம் பெறுகிறது. ஆ—ர்.]**

"கயமை மயக்கத்தில்", எமக்குப் பிடித்த மிகச் சிறந்த கதையொன்றைத் தெரிவுசெய்து, அக்கதை ஏன், எதற்காக, எப்படிச் சிறப்பான அந்தஸ்தைப் பெறுகிறது என்பதை ஆராயு முன், ஒரு சிறந்த சிறுகதைக்குத் தேவையான சில வரம்புகள் இவையெனக் கூறக்கூடியதாகவிருக்கின்றன. அவை, கதை சிறியதாக விருத்தல், நீரோட்டம் போன்ற நடையொழுக்கு, இயற்கையான உரையாடல், நாளாந்த வாழ்க்கைப் பிரச்சினையை அலசும் நன்னோக்கு, குறிப்பிட்ட நன்னோக்கைக் குத்திட்டுக் காட்டும் தன்மை, கதை முழுதும் அந்தவொரு கருவைச் சுற்றிச் சுழலும் ஒருமைப்பாடு, பாத்திரங்களின் குணநலன்களைக் குறித்துக்காட்டும் தன்மை, இயற்கையோடியைந்து கற்பனைக் கலந்துறவாடிவரும் கதாம்சம், கதை நிகழ் இட விளக்கவியல்பு, குறிப்பிட்ட மனக்கிளர்ச்சியோ, நிகழ்ச்சியோ தலைதூக்கி நிற்கும் தன்மை போன்றவைகளைக் குறிப்பிடலாம். இத்தன்மைத்தான கருத்துக்களை நாம் நம்மகத்தே வைத்து, கயமை மயக்கத்தில் கண்களைச் செலுத்தி, கருத்தினைக் கூட்டும்போது ஒன்பதாம் கதையாகிய "கற்பு" தலையோச்சி நிற்கின்றது. இதனால் ஏனையவை தரம் குறைந்தவை என்பதல்ல. எமக்கு கற்பே பிடித்தது என்பதே பொருள்.

"பலாத்காரத்தினால் ஒரு பெண்ணின் உடல் ஊறு செய்யப்பட்டால் அவள் மானம் அழிந்துவிடுமா. அதற்காக அவளுயிரை அழித்துவிட வேண்டுமா ?" இதுவே மையக் கருத்து. இக்கருத்தை நாம் பழமை நோக்குடன் பார்த்தாலும், புதுமைக் கருத்துடன் பார்த்தாலும் இக்கதையில்

நமக்குப் பதில் கிடைக்கிறது. இக்கருத்தைப் பற்றியெழுதும் போது ஆண் பெண் உறவு சம்பந்தமாக எழுத நேர்வது இயற்கையே. ஆனுல் அதுகூட வெகு லாவகமாக, நாசுக்காக, பண்போடு எழுதப் பட்டிருப் பதை நாம் காணக்கூடியதா யிருக்கின்றது. ''அவளை — என் மனைவியை — குசினிப் பக்கம் இழுத்துக்கொண்டு போனுர்கள். இரண்டொரு நிமிஷங்களில் அவளது அலறல் கேட்டது. பிறகு அவள் அலறவில்லையோ, அல்லது நான்தான் இரத்தம் கொதித்து, மூளை கலங்கி, வெறி பிடித்து மயங்கி விட்டேனே?'' கணவனின் வார்த்தைகள் இவை கள். ஆம், இரண்டு மனங்களின் நிலையை ஒரே சொற்றெடரால் வெளியிட்டிருக்கும் இயல்பு போற்றுதற்குரியது.

இலங்கையில் வெளியாகும் இலக்கிய ஏடாம் ''கலைச் செல்வி''யில் வெளிவந்த ஒரு கதையின் கருவைக் காட்டி, உண்மையான இயற்கை நிகழ்ச்சி களைப் புகுத்தியுள்ளார் கதாசிரி யர் வரதர். ஈழத்தில் உண்டான பெருவெள்ளமும், தமிழர் சிங் களவர் கலகமும் கதையின் ஊன்றுகோல்களாக அமைகின் றன. அவை கதைக்கு இயற்கை யான போக்கைக் கொடுக்கின் றன.

இலட்சியம் பேசும் மனம்கூடப் பேதலிக்கும் என்ற இயற்கை யின் தன்மையை ஆசிரியர் ஐயர் பட்ட மனவேதனையின் மூலம் முதலில் காட்டுகிறுர். ''என் மனைவி... மானம் அழிந்த என் மனைவி...'' என்று அழுத்த மாகச் சொல்லும்பொழுது நம் மனத்தில்கூட ஒரு வித ஆக்ரோ சத்தை ஏற்படுத்துகிறது. ஆனுல், பழமையில் சாதாரண மாக ஊறிப்போயிருக்கும் ஐயர் கூட பகுத்தறிவு பேசும்போது நாம் அடுத்த கணமே நெகிழ்ந்து விடுகிறேம்.

அல்லாமலும், ''மனம் சிறி தும் சம்பந்தப்படாதபோது அவளுடைய மானம் போய் விடுமா?... அப்படியென்றல் டாக்டரிடம் போகும் பெண்க ளெல்லாம்'' போன்ற சொற் கோர்வைகள் நம்மைச் சிந்திக்க வைக்கின்றன.

மொத்தத்தில் நாம் முதற் பந்தியில் தந்த இலக்கணங்களில் பலவற்றை நன்முறையில் நிறை வேற்றிக் கட்டுப்பட்டமைந் திருப்பதால் 'கற்பு' சிறந்த கதை என்கிறேன். ●

உலகத்தின் எந்த மூலையில் எவ்வளவு பெரிய மனிதனிடத் தில் நாணயக் குறைவும், ஒழுக்கக் குறைவும் இருந்தாலும் அந்த மனிதனைத் துச்சமாக நினைக்கிற துணிவு வேண்டும்.

— மணிவண்ணன்

**சி. பொன்னையா, ஊரெழு வடக்கு.**

கே: எம். ஜி. ஆரும் சரோஜா தேவியும் இலங்கைக்கு வந்த போது அவர்களுக்கு என்ன பட்டம் சூட்டப்பட்டது? என்ன காரணத்தாற் சூட்டப் பட்டது?

ப: எம். ஜி. ஆருக்கு ''நிருத்தியச் சக்கரவர்த்தி'' என்ற பட்டமும் சரோஜா தேவிக்கு ''நிருத்திய ராணி'' என்ற பட்டமும் சூட்டப்பட்டன. இப் பட்டங்கள் சூட்டப்படுவதற்கு, அவர்களிருவரும் இங்கு வந்ததுதான் காரணமே யன்றி வேறொன்றுமில்லை. இவை அர்த்த மற்றவை என்பதை எம். ஜி. ஆரே ஓரிடத்தில் 'நாசூக்'காகக் குறிப்பிட்டிருக்கின்றாரே!

ப: 'காலம் வந்துவிட்டது, இனிக் கல்யாணத்தைச் செய்'' என்று பலரும் ஆலோசனை கூறக் கூடிய அளவுக்குத் தாங்கள் 'பக்குவம்' அடைந்துவிட்டீர்கள் என்பதுதான் என் அபிப்பிராயம்!

**உஷாக்குமாரி, திருக்கேதீஸ்வரம்.**

கே: பவானி, சாந்தினி, புதுமைப் பிரியை போன்றவர்கள் எங்கே போய்விட்டார்கள்?

ப: 'இவர்களும் ஒரு காலத்தில் எழுதினார்களா?' என்று இப்போதைய வாசகர்கள் கேட்குமளவிற்கு இலக்கிய உலகிலிருந்து ஒதுங்கிப்போய் விட்டார்கள்!

## பட்! பட்! தாண்டவக்கோன்

**எம். கே. தம்பி, கற்கோவளம்.**

கே: மனிதன் மிருகமாவது எப்பொழுது?

ப: அளவிற்கு மீறிய ஆசையை அடக்கமுடியாத வேளைகளில்!

கே: சில பெண்களின் நடையில் மயிலின் சாயல், குரலில் குயிலின் ஓசை, விழியில் மானின் மருட்சி முதலியவற்றை அவதானித்துள்ளேன். தங்கள் அபிப்பிராயம் என்ன?

**ச. நாகராசா, தொல்புரம்.**

கே: எம். ஜி. ஆர் ஒரு சிறந்த நடிகர் என்றால் மறுக்கின்றார்களே! காரணம் என்ன?

ப: அப்படி மறுப்பவர்கள், சிறந்த நடிப்பு என்றால் என்ன என்பதை நன்கு தெரிந்துவைத்திருப்பதுதான் காரணமாக விருக்கும்!

**திருமலைத்தம்பி, திருமலை.**

கே: ''கலைச் செல்வி''யிற் பிரசுரஞ் செய்யக் கவிதைகளை அனுப்பலாமா? சன்மானம் ஏதும் வழங்கப்படுமா?

ப: நல்ல கவிதைகள் நிச்சயம் பிரசுரமாகும். பொருளாதார பலம் இல்லாததால், இப்போதைக்குச் சன்மானம் வழங்கப் பட மாட்டாது. ஆனல் தங்களின் 'விடயதானத்'திற்குப் 'பிரதியுபகாரம்' செய்யப்படும். அதாவது, தங்கள் கவிதை இடம் பெறும் பிரதியொன்று உபகாரமாகத் தங்களுக்கு அனுப்பி வைக்கப்படும்!

R. *சந்திரன், சாவகச்சேரி.*

கே: தான் சிகரட் குடித்துக் கொண்டு, மாணவர்களைச் சிகரட் குடிக்க வேண்டாம், அது தீமை தரும் என்கின்ருரே நம் ஆசிரியர் ஒருவர். அவருக்கு ஒரு புத்தி சொல்வாயா தாண்டவக்கோனே?

ப. 'நான்தான் இந்தத் தீய பழக்கத்திற்கு அடிமையாகி விட்டேன். என் மாணவர்களாவது நல்லவர்களாக வாழட்டுமே'' என்ற உயர்ந்த எண்ணம் தங்கள் ஆசிரியரிடம் இருப்பதாக நாம் ஏன் கருதக்கூடாது!

***உ. தர்மலிங்கம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.***

கே: பாரத நாணய மதிப்புக் குறைவினல் ஏற்படும் பலாபலன்கள் என்ன ?

ப: இந்தியாவிலே தயாரிக்கப்படும் பொருள்கள் வெளி நாடுகளில் அதிக அளவில் விற்பனையாகும்; அதனல் அந்நியச் செலாவணி பெருகும். வெளிநாடுகள் இந்தியாவிற்குக் கடன் கொடுப்பதற்கு முன் வரும். இவற்றைப் பற்றித் தக்க முறையில் உள்நாட்டிற் பிரசாரஞ் செய்யாவிட்டால் காங்கிரஸ் ஆட்சி ஆட்டங்காணும்!

***செ. தேவசுந்தரி, புதுத்தெரு, அத்தியடி.***

கே: உறக்கம் என்பது பிறக்கும்போதும் இறக்கும்போதும் கூடவே இருப்பதன் காரணம் என்ன?

ப: சத்திர சிகிச்சை செய்யும் போது, வேதனை தெரியாமலிருக்க மயக்க மருந்து கொடுக்கப்படுகின்றதல்லவா? அதைப் போன்றதுதான் இந்த உறக்கமும்!

***கா. சதானந்தசர்மா, கந்தரோடை.***

கே: இப்போதைய விஞ்ஞான யுகத்தில் மிகவும் விலையுயர்ந்த பொருள் என்ன?

ப: மனநிம்மதிதான் மிகமிக விலையுயர்ந்தது. விஞ்ஞானிகளும் சரி, பெரிய கோடீஸ்வரர்களுஞ்சரி மனநிம்மதியைத் தேடித்தான் ஓடிக்கொண்டிருக்கின்ருர்கள்!

***தாண்டவக்கோன்***
***மே/பா. கலைச் செல்வி***
***20, ஸ்ரான்லி வீதி,***
***யாழ்ப்பாணம்.***

# நம்நாட்டு வாசகர்

கதையொன்று இன்பியலில் ஆரம்பமானாலும் துன்பியல் முடிவே நன்று. ஏனெனில் எதுவும் கிடைப்பதிலும் கிடைக்காதிருப்பதிலேயே தன் தரத்தை உயர்த்திக்கொள்கிறது. அப்படியொரு கதையை இலக்கியமாக்கிவிட்ட ஆசிரியர் 'அது கிடைக்காதா' என்ற ஏக்கத்தை விதைத்துவிடுவதால் ஒரு குறிக்கோளை நோக்கி வாழச்செய்கிறது கதை. வாழ்கை வாழ்வதற்கே என்றால் அதைக்கூறும் கதையும் வாழ்வதற்கே அன்றோ!

○ மு. கிருபாகரன்—மத்துகம.

வளர்ச்சியை விரும்பும் நாம் அதை வளர்க்கக்கூடிய ஒரு பத்திரிகையைத் தேடவேண்டும்; அப்பத்திரிகை தரமானதாயுமமையவேண்டும். இலக்கியத்தோடு இணைந்த வாழ்வு மனித சமுதாயத்தை உயர்த்தும் என்ற உண்மையை மக்களிடையே போதிப்பதை இனிமையாகவும், எளிமையாகவும் கூறும் திறமையைப் பெற்றிருக்கும் கலைச்செல்வி வளர வேண்டும்.

○ 'பவளநாடன்'—நீர்வேலி.

இலங்கையில் இன்று சிலர் தாமும் எழுத்தாளர் எனக் காட்டிக்கொள்வதற்காகவும், அதில் தமக்கும் ஏதோ வரவு உண்டு என்பதற்காகவுமே பத்திரிகை வெளியிடுகின்றனரே தவிர, நாம் முழு மனிதராக வாழ வழிவகுக்கவோ, நல்ல கருத்துக்களைப் பரப்ப வேண்டுமென்றோ செய்யவில்லை. 'எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார், திண்ணியராகப் பெறின்''.

கே. எச். ஏ. கஹார்—கிண்ணியா 5.

தமிழகத்தில் மு. வ., விந்தன் முதலியவர்கள்போல் புதுமை உணர்ச்சியைத் தூண்டும் கதைகளை, நாட்டின் சீர்கேட்டையும் அவை மாறுவதன் அவசியத்தையும் புகுத்தி' எழுதுபவர்கள் ஈழத்திலும் சிற்பி, அம்பி, செங்கை ஆழியான், சு. வே. என்று எத்தனையோ பேருளர். எனவே நண்பர்களே! தமிழகத்து சஞ்சிகைகளை எப்படி ஆர்வத்துடன் வாங்குகின்றீர்களோ, அதே ஆர்வத்துடன் நமது கலை, இலக்கியம் வளர வேண்டும், புதிய எழுத்தாளர் தோன்ற

வேண்டும் என்பதற்காக **கலைச் செல்வி, விவேகி, மல்லிகை** முதலிய நம்நாட்டுச் சஞ்சிகைகளை ஆதரியுங்கள்.

○ ப. தெய்வேந்திரம்—**அரியாலை.**

**எ**ல்லாரும் கண்ணைக் கவரும் அட்டைப்படச் சஞ்சிகைகளை வாங்குகிறார்கள். அட்டைப் படத்தில் மாத்திரம் ஈழத்துச் சஞ்சிகைகளுக்குக் கவர்ச்சி கிடையாது. ஆனால் தரம் என்று பார்க்கும்போது யாழ்ப்பாணத்துப் பத்திரிகைகள் மிக உச்ச நிலையிலேயே இருக்கின்றன. இலைமறை காய்போலிருக்கும் எம்மவர்களை ஆதரிப்பது தேசியத்தின்பேரில் நம் கடமை.

○ கந்த. ஞானமுத்தன்—**கைதடி.**

**எ**வனொருவன் தன் பேனாவால் சமூக சூழ்நிலையைப் படம் பிடித்து, அவற்றின் குறைகளையும், குற்றங்களையும், மடமையையும் சுட்டிக் காட்டித் தன் எழுதுகோலால் நாட்டின் புதுமைக்கும், விடிவிற்கும் புத்துணர்ச்சி தருகின்றானோ; எவனொருவன் தன் கவிதையால், கதையால், கட்டுரையால், புதியதொரு சகாப்த்ததை உருவாக்கும் நோக்கத்தோடு கருவமைத்து இலக்கியம் செய்கின்றானோ அவனே நாடுபோற்றும் நல்லஎழுத்தாளன். இந்த வரிசையிற்றான் பாரதியும், நாமக்கல் களிஞரும், கவிமணியும், பாரதிதாசனும் இவர்களுக்கெல்லாம் மேலாக உலக மகாகவிஞனை வள்ளுவப் பெருந்தகையும் வாழ்ந்தார்கள்—பிள்ளையில்லாத மலடி சாணை சேலையை மணந்ததுபோலத்தான் நாமும் சில சஞ்சிகைகளை விழுந்து விழுந்து படிக்கிறோம். இந்நிலைதான் மாறவேண்டும். நாமும் சிந்திக்க வேண்டும்.

○ மு. திருநாவுக்கரசு—**இலங்கை சட்டக்கல்லூரி.**

---

*மாஜி எழுத்தாளர் சங்க அறிக்கை*

*அன்புடையீர்!*

*ஈழத்தில் வெளியான இ. நாகராஜனின் 'நிறை நிலா' தொகுதிக்கு சாகித்திய மண்டலப் பரிசு கொடுக்கப்படவில்லையாம். 'நிறை நிலா'வுக்குப் பரிசு கிடைக்குமென எல்லா எழுத்தாளரும் எதிர்பார்த்தார்களாம். நாங்கள் இதற்கென்ன பண்ணுவது?*

**செயலாளர்,**
**மாஜி எழுத்தாளர் சங்கம்**
**வைகுண்டம்**

விமர்சனம்

# மீனுட்சி கல்யாணம்

செழியர் பிரான் திருமகளாம் சௌபாக்கியவதி மீனுட்சிக்கும், உலகம் முழுதாண்ட ஸ்ரீ சுந்தரேஸ்வரருக்கும் சரஸ்வதி மண்டபத்தில் மங்கலத் திருமணம் நடை பெற்றது. பக்தி மன்றத்தார் தயாரித்தளித்த மீனுட்சி கல்யாண நாட்டிய நாடகத்தைத் தான் குறிப்பிடுகிறேம்.

திக்விஜயம் செய்து வரும் மீனுட்சிக்குமுன் சுந்தரேசர் தோன்றியதும் அவள் வீரம் மறைந்து பெண்ணுக்குரிய நாணம் அவளுக்கு உண்டாகிறது. ''அஞ்சேல், சோமவாரத்தன்று வந்து நின்னை மணப்போம்'' என இசைக்கும் விருத்தம் மீனுட்சியின் மனதை மாத்திரம் அல்ல, எம் மனதையும் மகிழ்விக்கிறது.

திருமதி புனிதம் திருச்செல்வம் அவர்களை தலைமை தாங்கி நிற்கும் பக்தி மன்றம், புனிதமானதொரு தெய்வீகக் காட்சியை நாட்டிய நாடகமாக்கி, பல சிறந்த அம்சங்களை அதனுள்ளே புகுத்திக் கலையுலகுக்களித்துள்ளது. இந்நாட்டிய நாடகத்தை எம்மதத்தினரும் எம்மொழியினரும் பாராட்டும் வகையில் தயாரித்தளித்த திரு. C. V. ராஜசுந்தரம் அவர்களுக்குக் கலையுலகு பெருங்கடப்பாடுடையது. பாலமீனுட்சியாகத் தோற்றிய விமலா மாதுருபூதம், மீனுட்சியின் பாகத்தை மிகுந்த திறமையோடு சித்திரித்துக்காட்டிய கௌரி முத்துக்குமாரசாமி ஆகியோரின் நாட்டியத் திறமை பாராட்டுதற்குரியது. நட்டுவாங்கத்தைத் திறம்படச்செய்து மீனுட்சி கல்யாணத்தைச் சிறப்பித்தவர் திருமதி விஜயலக்ஷ்மி ஷண்முகம்பிள்ளை அவர்கள்.

பல பாடல்களுக்கு இசையமைத்த திரு. பிச்சையப்பா அவர்கள், இன்னிசையோடு, பாட்டுக்களின் பொருளமுதம் புலப்பட யாவரையும் மகிழ்வித்த திருமதி சரோஜினி தனபாலசிங்கம், அருந்ததி தனபாலசிங்கம், வசந்தி நகுலேசு, ராமேஸ்வரி பாலகிருஷ்ணன், திரு. வேல்சாமி, திரு. பரராஜசிங்கம் ஆகியோரும் மிருதங்கம் வாசித்த திரு. இரத்தினம் அவர்களும், பங்குபற்றிய பிற இசைக் கலைஞர்கள் யாவரும் இந்நாட்டிய நாடகம் சிறந்து விளங்குவதற்குக் காரணமா யிருந்தோராவார்.

இறைவனின் திருமணக் காட்சியைக் கண்டுகளித்த மனநிறைவோடு ''கண்டேனவர் திருப்பாதம்; கண்டறியாதன கண்டோம்'' என்னும் அடி வாத்தியங்களில் இசைத்துக் கொண்டிருக்கிறது. திரு. வேல்சாமி பாடிய விருத்தமும் திருமதி ஷண்முகம்பிள்ளை பாடிய ''முன்னம் அவனுடையநாமங் கேட்டாள்'' எனத் தொடங்கும் திருத்தாண்டகமும் ''மீனுட்சி சுந்தரரே ஆடீரூசல்'' என்னும் ஊஞ்சற் பாட்டும் இன்னும் எம் செவிகளில் ஒலித்துக் கொண்டிருக்கின்றன.

" மகேஸ் "

# விண்ணும் மண்ணும்!

★

சாய்ந்து போகும் கோட்பாடுகளுக்கு முண்டு கொடுத்து நிலை நிறுத்த முயலும் தாழ்வுச் சிக்கலுக்கு உள்ளான புதியதொரு வர்க்கத்தின் பிரதிநிதி அவன்.

“தம்பி!”

“என்ன...?”

தாயின் அழைப்பில் இருந்த அன்பின் தழுவல், அவன் வினாவில் இருப்பதில்லை. ஏதோ நினைவில் சஞ்சரித்துக் கொண்டிருந்த அவனுக்கு, அம்மாவின் அழைப்பு எரிச்சலைத் தந்தது.

இன்று மாலை கோபால் வருவான். அவனுடன் மெயின் ரோட் பக்கம் போகலாம். நல்ல காட்சிகள்; கண்ணையும் கருத்தையும் தம்பால் இழுக்கும் காட்சிகள்.

“இம்முறையாவது சோதனையிலை 'பாஸ்'பண்ணி விடப்பா! ஐயாவுக்கு உழைப்பில்லை... உன்னை நம்பித்தான் இருக்கிறம்... உன்னை நம்பித்தான் உன்ரை மூன்று தங்கச்சிகளும் இருக்கு...”

கோபால் வந்து விட்டான்; அம்மா கூறுபவற்றைக் கேட்டுக் கொண்டிருக்க அவனுக்கு நேரமில்லை. அம்மா நெடுகத்தான் கூறிக்கொண்டிருப்பாள்.

மாலை வேளைக்கே யுரிய குளிர் காற்று.

கடற்கரையோர வீதியில் சைக்கிலில் அவன் கோபாலோடு வந்து கொண்டிருந்தான்; பொழுது போகவில்லை. வீட்டிற்கு நேரத்தோடு போனால்: அம்மா ஏதாவது சொல்வாள்,

“ஏன், தம்பி! ஐயாவிற்குக் கூடமாட உதவக் கூடாதா? சும்மா வெளியிலை திரிஞ்சு போட்டு வருகிறியே...”.

அம்மாவிற்குக் கண்டிக்கத் தெரியாது. கண்டிப்பினால் அடங்கக் கூடியவனுமல்ல அவன்.

அவன் படிப்பது ஐயாவிற்கு உதவுவதற்குத் தானா? பல்கலைக் கழகத்தில் படித்துக் கொண்டு, இரும்பைக் காய்ச்சி அடிப்பதை யாராவது பார்த்தால் என்ன நினைப்பார்கள்?

அலுப்பாந்திச் சந்தியில் திரும்பும் போது, கோபால் கேட்டான்: “நடராசா எப்படி இருக்கிறான்?”

“அவன் படு பிற்போக்குவாதி...”

“செங்கை ஆழியான்”

''அதைக் கேட்கவில்லை... உன்னோடு எப்படி?

''என்னோடு கதைப்பான்... படிப்பைப் பற்றியும், தன்னைப் பற்றியும், தன் குடும்பத்தைப்பற்றியும் தான் அவனுக்குக் கவலை... சமூகத்தைப் பற்றி அவனுக்குக் கவலையே கிடையாது. நமது சமூகம் பல வர்க்கங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது... முதலாளித்துவ பூர்ஷ்வாக்கள் பாட்டாளி விவசாயிகளைச் சுரண்டுகிறார்கள்... பாட்டாளிகளின் கரங்களில் ஆட்சியைக்கொடுத்து வர்க்க பேதமற்ற, சுரண்டல் தன்மையற்ற ஒரு சோஷலிச சமுதாயத்தை நாம் சிருஷ்டிக்க

## ★ அட்டைப் படக் கதை ★

வேண்டும்... உயர்ந்த இலட்சியம் அவனுக்கு இல்லை... மக்கள் சீனக் குடியரசை எடுத்துப் பார்...''

கோபால் குறுக்கிட்டான்:

''போதும்... போதும்! ... ஏதோ மேலை நாட்டுப் பழைய வரலாறுகளைக் கேள்விப்பட்டு விட்டு, ஏதோ அங்கைபோலை இங்கையும்... அந்தக் கதை ஏன்? நீங்கள் மணலிலை தூண்டில் போட்டுத் திமிங்கிலம் பிடிப்பவர்கள்...''

''நீயும் ஒரு பிற்போக்குவாதி... உங்களைப்போல ஆக்கள் இருக்கிறதாலைதான் இந்த நாடு உருப்படாது இருக்கிறது...''

சமூகத்தைப்பற்றி அவன் கூடுதலாகக் கவலைப்பட்டான்; பற்றுதலில்லாத கவலை. அவன் வீட்டில் அம்மா அடுத்தவேளை அடுப்பு மூட்ட என்ன வழி என்று சிந்தித்துக் கொண்டிருந்தாள்.

நாளை இவை எல்லாம் அவன் கண்முன் விரியும். அன்று இன்னொரு சம்பவமும் நினைவு வரும்.

நடராசா அவனோடு கல்லூரியில் ஒன்றாய் படித்தவன். அவன் ஒரு வகுப்பிலும் தங்காது, ஒழுங்காய்ப் படித்து பட்டப்படிப்பின் இறுதி யாண்டில் இருந்தான். இவன் பட்டப் படிப்பின் முதலாண்டில் தேறாது இருந்தான்.

நடராசாவை எண்ணும் போதெல்லாம் அவனுக்கு ஆத்திரம், ஆத்திரமாக வரும். அவனைப்போலத் தானில்லை என்ற எண்ணம் அசூசையை ஏற்படுத்தும். அவனைப் பிறர் போற்றும்போது அவனுக்கு எரிச்சலாக இருக்கும்.

இத்தகைய ஒரு மனநிலை நிலவும்போதுதான், அவன் தோழர் மணியத்தைச் சந்திக்க நேர்ந்தது. அவர் இணைப்பு, அவனுக்கு புதிய உண்மைகளைக் காட்டின. இல்லாத தெல்லாம் இருப்பதாக எண்ணவைத்தன. பூர்ஷ்வாக்களைப் பற்றித் தோழர் நாட்கணக்காக அவனுக்கு ஓதுவார்.

அப்போதெல்லாம் 'டெறிலின்' சேட்டோடு திரியும் நடராசாதான் நினைவிற்கு வருவான். 'இவனுல் எப்படி டெறிலின் சேட் போடமுடிகிறது. என்னுல் முடியவில்லையே?...''

''சம சந்தர்ப்பம் எல்லாருக்கும் கிடைக்கவில்லை... சந்தர்ப்பம் கிடைத்தவர்கள் முன்னேறிவிட, உம்மைப் போன்ற சந்தர்ப்பம் கிடைக்காதவர்கள் சமூகத்தின் பிற்படியில் சுரண்டப்படுபவர்களாக நிற்கிறீர்கள்...''

தோழரின் அறிவுரைகள் உண்மையாகவே அவனுக்குப்பட்டன. சந்தர்ப்பம் கிடைத்தபடியினுல்தான் நடராசா முன்னுக்குப் போய்விட்டான். இவனுக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. ஆனுல், அவன் பயன்படுத்தாது விட்ட தவறு நாளை அவனுக்குத் தெரியும். ஒவ்வொரு வகுப்பிலும்ஒவ்வோராண்டுகூட இருப்பதற்குச் சந்தர்ப்பக் குறைவா காரணம்?

எப்படியோ வீட்டிலிருந்து மாதாமாதம் பணம் அவனுக்கு வரும். அப்பணம் எப்படி வருகிறது என்று அவனுக்குக் கவலை இல்லை. போதவில்லையே என்றுதான் கவலை. கடன் பட்டோ, விற்ருே அனுப்புகின்ற அப்பணத்தைக் கணப்பொழுதில் செலவிடுவான் அவன். தான் செலவழிப்பது ஏதோ சமூகத் தொண்டு என எண்ணம் அவனுக்கு.

''எனக்கென்ன... தம்பியின்ரை படிப்பு முடிந்தால், உடனே உழைச்சு இந்தக் கடன் எல்லாத்தையும் தீர்த்திடலாம்... மூன்று குமரையும் ஒவ்வொருவன்ரை கையிலை பிடிச்சுக் கொடுத்திடலாம்... அவன்ரை படிப்புக்கு நல்ல சீதனம் வாங்கினுல்... நன்கொடையாக இந்தக் குமருகளுக்கும் வாங்கலாம்...''

அம்மாவின் கனவுகள் இவை.

தாயின் கனவுகளை நினைக்க அவனுக்கு எங்கே நேரம்.

'புரட்சி ... புரட்சி...'' என்று எல்லோருடனும் கூறிக்கொண்டு திரிந்தான். 'யாருடன் புரட்சி' என்பது அவனுக்குத் தெரியாது. பரீட்சை வந்தது; போனது.

'சமசந்தர்ப்பம் தனக்கு அளிக்கப்படவில்லை' என்று அவன் திரும்பவும் கூறிக்கொண்டான்.

நான்கு புறங்களிலிருந்தும் கவலைகள் அவனைப் பற்றிக்கொள்ளும் போது, நாளை அவனுக்கு உண்மைகள் தெரியும்.

அது ஒரு இனிய கனவு.

அவளை அவன் காணநேர்ந்த சந்தர்ப்பத்தை அவனுல் மறக்கவே முடியாது. எப்படி மறக்க முடியும்?

அவனுடைய பல்கலைக்கழக நண்பன் ஒருவனின் தங்கை

அவள். நண்பனைச் சந்திக்க முதன் முதல் அவன் வீட்டிற்குச் சென்றவன், அவன் தங்கையைத்தான் சந்தித்தான்.

அழகாக அவள் தூணோடு சாய்ந்து நின்று அவனோடு பேசிய விதம இன்னும் நினைவிற்கு வருகிறது. இடத்தோள் தூணோடு முட்டி நிற்க, வலப்புறம் இடை சாய்ந்து அவள் நின்ருள்.

முல்லைக் கொடி கொழுகொம்பைப் பற்றிப் படர நின்ற நிலை.

அவன் அதன்பின் நண்பனைத் தேடி அடிக்கடி அங்கு சென்ருன். நண்பன் வீட்டில் இல்லாத வேளைகளில் நண்பனைத் தேடிச் சென்ருன், அவன்.

வீட்டில் அவன் தங்கைகள் மூவர்.

பட்டப்படிப்பின் இறுதியாண்டில் அவன் இருந்தான். வீட்டில் இருந்து பணம் வருவது பிந்தியது. அம்மா கடிதம் எழுதியிருந்தாள்:

'தம்பி, கவனமாகப் படி. எப்படியாவது பணம் அனுப்பி வைப்பன். கடஞே தலைமேல் உள்ளது. இன்னும் ஆறு மாதம் தானே. பெரியாச்சியின் சங்கிலியை விரைவில் விற்றுக் காசு அனுப்புறன்...'

கடிதத்தைப் படித்த அவன், 'அணிகலன்கள் அதையாவது விரைவில் விற்று அனுப்பினுல் என்ன' என்று எண்ணிக் கொண்டான்.

அவன் அவசியம் கட்சிச் சந்தா கட்டியாக வேண்டும்.

அவனுக்கு இலட்சியம் பேச கட்சி; இன்பம் பேச அவள். வீட்டுக் கவலை அவனுக்கேன்?

''எப்ப கலியாணம்...'' என்று ஒருநாள் அவள் கேட்டாள்.

''படிப்பு முடியட்டும், செய்வம்... ஏன் அவசரம்...?''

''இல்லை... பயமாக இருக்குது... படிப்பு முடிஞ்சதும் என்ருல், வீட்டில் வேறை ஆரையாவது உங்களுக்குப் பேசிச் செய்திட்டால்... அதனுல், இப்படிச் செய்வமா... எங்கடை ஐயாவும் அதைத்தான் கேட்கச் சொன்னுர்...''

''என்னத்தை...?''

''இப்ப எழுத்தை முடிப்பமா?''

அவன் இதயம் ஒரு கணம் 'திக்'கென்றது. அம்மா, ஐயா, தங்கைகள்... ஒரு நிமிடம் நினைவில் தோன்றி அழிந்தனர்.

''உன்னை நம்பித்தான் உன்ரை மூன்று தங்கச்சிகளும் இருக்கு...'' —அம்மா என்றே கூறியவை.

''நீ ஒரு இட்சியவாதி யப்பா! சீதனம் இல்லாமல் ஒரு பெண்ணைக் கட்டப் போகிருயே? இலட்சியம் பேசுகிறவர்கள் எல்லாம் எங்கை செய்து காட்டு

**ஓ(தி)ருமணம்**

**"நீங்கள் ஏன் இன்னமும் திருமணம் செய்துக்கொள்ளவில்லை?"**

**"அது ஒருமுறைதானே முடியும்."**

கிறார்கள்... நீ பேசியபடி செய்திட்டாய்...' —தோழர்களின் பாராட்டு.

அவள் வென்ருள்.

நாளை அவனுக்குச் சுய அறிவு வரும். தான் வந்த பாதையின் பொய்மைகள் யாவும் நிதர்சனமாகத் தெரியவரும். அன்று, அம்மா கண்ணீரோடு வரைந்த அக் கடைசிக் கடிதமும் நினைவு வரும்.

'தம்பி, நாங்கள் கேள்விப் படுவது உண்மை தானு? நான் நம்பவில்லை. நீ அப்படி ஒரு போதும் செய்யமாட்டாய். குஞ்சியப்பு கடன்காசுக்கு நெருக்குகிருர். ஐயாவிற்கு ஐந்தாறு நாட்களாகச் சுகமில்லை. கவனமாசப்படி. உன்னை நம்பித் தான் நாங்கள் இருக்கிறம். இத்துடன் இருபது ரூபா உன் செலவுக்கு வருகுது.'

அவனுக்கு இந்த இருபது ரூபா என்னத்திற்கு? அவனுக்கு இது போதுமா? அவனுடைய மாமன் அவனுக்குத் தேவையான பணத்தைக் கொடுக்கிருர்.

"நீர் கவனமாகப் படியும், தம்பி! உத்தியோகம் நானெல்லோ எடுத்துத்தாறது!" என்றும் கூறியிருக்கிருர்.

அவன் படிக்கின்றுன்.

நாளை போலித்திரை விலகும். அவன் அழுவான். தன் குடும்பத்தினரின் சோக உருவங்கள் மனத்தில் வந்து வந்து போகும். அவர்களின் கண்ணீர் மேலும் பெருகும். ஆனல் அவர்களின் கண்ணீரோடு அவனின் கண்ணீர் சேராது.

அவன் சிந்திக்கத் தொடங்குவான். ஆனல் ஐயர் வந்த வேளையில் அமாவாசை போய் விட்டிருக்கும். காலத்தின் இயல்பான கழிவில் கழிந்துபோன அர்த்தமற்ற வாழ்வின் சுவடுகள் நீங்காத கறையாக ஒட்டி நின்று அவனது எஞ்சிய வாழ்வின் இனிமையையும் பாழாக்கும்.


மீண்டும் அழுகைதான்.

அந்த அழுகையெல்லாம்அவன் செய்யத் தவறிய கடமைகளுக்கு என்றுமே கழுவாயமைய மாட்டாது.

**காதலிக்க.......**

**"நீங்கள் ஏன் என்னைக் காதலிக்கிறீர்கள்?"**

**"திருமணம் செய்துக் கொள்ளாததால்தான்."**




*அன்பான சகோதரிகளே!*

*இப்பகுதியில் நீங்கள் காட்டும் ஆர்வம் ஆச்சரியகரமானதாயிருக்கிறது. கட்டுரைகள் எப்போது பிரசுரமாகுமென அடிக்கடி கேட்டெழுதுகிறீர்கள். உங்களொவ்வொருவரின் கட்டுரைகளும் வரிசைக் கிரமமாக இடம் பெறும்.*

*—அக்கா*

# மாணவிகளுக்கு.... !

❋

**மகாத்மா காந்தி**

❋

"**வி**ளையாட்டுப் பொம்மைகள் ஆவதற்காகப் பெற்றோர் உங்களைப் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பவில்லை; கருணை மிகுந்த சகோதரிகளாக நீங்கள் ஆக வேண்டும், என்று எதிர்பார்த்தே அவர்கள் இங்கு உங்களைக் கல்வி கற்க அனுப்பி வைத்திருக்கிறார்கள். ஒருவித உடை அணிந்து கொள்ளுபவர்களே கருணை உடைய சகோதரிகள் ஆவர் என்று தவறுதலாக எண்ணி விடாதீர்கள். தன்னை அதிகப்படுத்தி எண்ணிக்கொள்ளாமலும், தன்னைவிட ஏழ்மை நிலையிலும், துரதிட்டம் பிடித்த நிலையிலும் இருப்பவர்களைப் பற்றி எவள் அதிகமாக நினைக்கிறாளோ, அவளே கருணையுடைய சகோதரி ஆவாள்."

"ஒவ்வொரு பெண்ணும், ஒவ்வொரு இந்தியப் பெண்ணும், கலியாணம் செய்து கொள்வதற்கு ஆகவே பிறக்கிறாள் என்றெண்ணுவது சரியன்று. தனி மனிதனுக்குச் சேவை செய்து கொண்டிருப்பதற்குப் பதிலாக, பொது வாழ்வில் ஈடுபட்டு, பொதுச் சேவைக்கென்றே தங்கள் வாழ்க்கையை அர்ப்பணம் செய்திருக்கிற பெண்கள் அநேகரை நான் உங்களுக்குக் காட்ட முடியும். சீதையைப் போல், பார்வதியைப்போல் உயர்ந்த பெண்

கள் இந்துப் பெண்களிடையே தோன்ற வேண்டும். கூடு மானல் சீதையையும் பார்வதி யையும் போல் பெரும் புகழ் படைத்த பெண்கள் தோன்ற வேண்டும். பார்வதிஅம்மை கணவன் பொருட்டு பணம் செலவு செய்யவில்லை, தன்னை விலைக்கு விற்கவும் அவள் சம்மதிக்க வில்லை. ஏழு சதி மார்களில் ஒருத்தியாக இன்று இந்து சமூகம் அவளைக் கொண் டாடுகிறது. பள்ளிக்கூடப் படிப் பில் பெற்ற பட்டத்தினலல்ல நாம் கேள்விப்படாத முறை யில் தவமிருந்ததின் காரண மாகவே அவளுக்கு இந்தப் புகழ் கிட்டியது.''

''வாழ்க்கையில் துணைவன் ஒருவன் வேண்டும் என்ற உணர்ச்சி உங்களுக்கு ஏற்படும் போது, பணம், புகழ், அழகு இவற்றைத் தேடியலையாமல், நல்லொழுக்கத்திற்கு உறுதுணை யான ஒப்பற்ற குணங்கள் படைத்த ஒருவனையே நீங்கள் தேடவேண்டும். பார்வதி அம்மையும் அப்படித்தான் செய் தாள். பார்வதிக்குச் சிவனைப் பற்றி நாரதர் 'உடல் முழுதும் நீறணிந்த ஆண்டி. அழகில் லாதவன், பிரமசாரி' என்று சொன்னர். 'ஓ அப்படியா! அவர்தான் என் கணவர்' என் ருள் பார்வதி. பார்வதி தவ மிருந்ததைப் போல் ஆயிரக் கணக்கான ஆண்டுகள் உங்க ளால் தவமிருக்க முடியாது தான். பார்வதியைப் போல் நீங்கள் தவமியற்ற விட்டால், சிவனைப்போல அநேக ஆடவர் களைத் தோற்றுவிப்பது இயலாத காரியம். மனவலியற்ற மனி தர்களாகிய நாம் பார்வதி தேவி யைப் போல நீண்ட காலம் தவ மிருக்க முடியாது போயினும், ஆயுள்பரியந்தமாவது தவம் இருக்கக் கூடும்'' ●

(இரா. சரசுவதி)

---

# பெண்!

❊

**சிவா.**

❊

பெண் என்ற இரு எழுத்தை வைத்துக் கொண்டு எத்தனை திருவிளையாடல்களைத்தான் செய் கிறுன் மனிதன்.

இன்றைய நிலையில் நாம் பெண் இனத்தை எண்ணும் போது இரத்தம் கொதிக்கிறது; கண்ணீர் சிந்துகிறது. காரணம், ஒருசில பெண்களினல்தான். இன்னும் ஒருசில ஆண்களினல் என்றும் கூறலாம்.

பெண் பெண்மையோடுவாழத் தெரிந்து கொள்ளவேண்டும். தனக்குக் கிடைத்த சுதந்திரத் தைச் சிந்தித்துப் பயன்படுத்தத் தெரிய வேண்டும். ஒழுக்கம், ஒழுங்கு முறையை வேலியாக அமைத்துத் தன்னைத்தானே நிபந்

தனைக்குள் கட்டுப்படுத்த வேண்டும்.

பேண்ணுனவள் தன்னை நிலமாக எண்ணி ஒழுக்கம், அறிவு, பண்பு ஆகிய உரத்தை போர்வையால்மூடி அதில் விளையும் பயிரான புத்திரச் செல்வங்களை அறிவுக் களஞ்சியமாக்க வேண்டும். ஆனுல் இன்றைய நிலையில் காதல் என்னும் மூன்றெழுத்தில் கட்டுண்டு, காதலை அழகிய காவியமாக எண்ணி வானத்தின் நடுவில் மிதப்பது போல் இருக்கிருர்களே. ஆனுல் காதலுக்கடியில் இருக்கும் பாதையைச் சிறிது பார்த்து நடக்கிருர்களா? காதல் என்பது கரடுமுரடான பாதை. காதலில் மூழ்கி இருப்பவர்களுக்கு எல்லாமே ரோஜாப் பூவாகத்தான் இருக்கும். இறுதியில் தன்னையே தான் இழந்து நடுத்தெருவில் தள்ளாடி தஞ்சம்புக வழியின்றிக் கதறுவதைத் தவிர வழியில்லை.

கண்ணீரைச் சாட்சி வைக்கிருர்களே! கண்ணீரில் காவியம் வடிக்கிருர்களே! யார்? பெண்கள்தான். வஞ்சக மில்லாப் பெண்கள் போலிருந்து அலங்கோலமாகிருர்களே! வாழ்வில் மனமுடைந்து நீதிமன்றத்தில் தலைநிமிர்ந்து வாதாடுகிருர்களே! செ... என்ன அருவருப்பான பெண்குலம்.


இத்தனைக்கும் மத்தியில்தான் சேற்றில் மலர்ந்த செந்தாமரை போல் அறிவு, ஆற்றல் மிக்க பெண்களும் வாழ்கின்ருர்கள். வாழ வழி வகுத்து பெண்களைப் பெண்களே தாழ்த்தும் நிலைமையை நீக்கி சற்று நம்மைச் சிந்தித்து முன்னேர் வகுத்த நம் பணி நல் வழியில் செய்வதென நல்வழியைக் கைக்கொண்டு இனியும் நாம் நெறிபிறழாது வாழ்வோமாக. ●

---

# மினிட் ஸ்கேட்!

பண்பாடுகளுக்கென்றே அகில உலகும் புகழ்ந்த தமிழ்ப் பெண்கள் இன்று அநாரிகமாவதேன்? ஒரு பெண் மினிட் ஸ்கேட் அணிவதால் அச்சமூகத்துக்கே அது இழிவைத் தருமென அவர்களறியாததேன்? பாவாடை கட்டி, தாவணி அணிந்து, குஞ்சம் தரித்து, மலர் சூடி இருப்பது எத்தனை எழிலைத் தரும்! — கொழும்பிலல்ல; யாழ்ப்பாணத்தில்தான். ஆதிகால கற்சிலைகளணிந்திருக்கும் மினிட் ஸ்கேட் உருமாறி சேலையாக மாறிய பின்னும் மீண்டும் நாம் ஆதிவாசிகளாகலாமா? ●

உஷாக்குமாரி.




# காதலிக்க நேரம் என்ன?

★

ஒரு பெண் நேரம் கேட்டால், அதுதான் காதல். இந்தக் கடிதத்தைக் கொஞ்சம் போட்டு விடுங்கள் என்று சொன்னால் அது கொஞ்சம் முன்னேறிய காதல். இதை நான் சரியான விளக்கம் என்று துணிந்து கூற வில்லை. ஆனல் காதல் பள்ளியில் அரிவரி படிக்கும் நான் இவ்வாறுதான் நினைத்தேன். இந்தப் பாடத்துக்குச் செய்முறைப் பயிற்சியாகச் சினிமாவைத்தான் பயன்படுத்தினேன். விஞ்ஞான மாணவர்கள் விஞ்ஞானகூடத்தைப் பயன்படுத்துவதுபோல.

யாழ்ப்பாணத்தில்தான் எனக்கு வேலை. எடுக்கும் சம்பளம் வயிற்றுப்பாட்டுக்கே போதாது. எனவே சைக்கிளில்தான் வேலைக்குப் போவேன்.

யாழ்ப்பாணத்துக்குச் செல்வதற்கு மூன்று வழிகள். மூன்றையும் பாவிப்பேன். நீளமான வீதியைத்தான் விரும்பிப் பாவிக்கிறேன். குறுகிய பாதையை உதாசீனம் செய்கிறேன். காரணம்... அது எனக்கு நீளமானதாகத் தெரிகிறது. நீளமான பாதை எனக்கு நீளம் குறைகிறது. இதென்ன இறப்பராலேயா ரோட் போட்டிருக்கிறார்கள் குறுகவும், கூடவும் என்று கேட்காதீர்கள். நீளமான பாதையை மாலினிதான் குறைக்கிறாள். தெருக் கதவைப் பிடித்துக் கொண்டு, என்னையே எதிர் நோக்கி நிற்கும் மாலினி இருக்கும்வரை சைக்கிள் ஓட்டம் எனக்கு 'பென்ஸ் கார்' பிரயாணமாகத்தான் இருக்கும்.

மாலினியின் வீட்டை எட்டரை மணிக்குக் கடக்கும்போது. அவள் தன் கதவுக்கு வருவாள் அவளது முகத்தில் நான் ப...

'நிலவின் தாசன்'

பான சாயலைக் கண்டேன். 'முழங்கால் முட்டப் பாவாடை' தான் நாகரிகமாக இருந்தும் 'பாதம் முட்டப் பாவாடை' அவளுக்கு நல்லாகத்தான் இருந்தது.

''நேரம் என்ன?'' மாலினி என்னிடம் கேட்ட முதற் கேள்வி இதுதான். ஏற்கனவே உள்ளத்தைப் பறித்தவள் இந்த வினு மூலம் இதம் அளித்தாள்.

நேரம் சொல்வதற் கிடையில் சைக்கிள் சிறிது தூரம் சென்றிருந்தது. அதற்காக நேரத்தைச் சொல்லாமல் விடுவது அழகாகத் தெரியவில்லை. ஒரு 'றவுண்ட்' போட்டுத் திரும்பினேன். ''எட்டரை மணிதான்'' என்று அவளது வினுவுக்குப் பதிலளித்தேன். எனக்கு ஏதோ நிறைவுற்றது போல் மகிழ்ச்சியும் கூட.

நேரத்தைச் சொன்னதும் 'தாங்ஸ்' என்றுள் மாலினி. அழகான தமிழிருக்க ஆங்கித்தில் கதைத்தால் எனக்குப் பிடிக்காது. ஆனுல் அவள் தந்த, 'ஆங்கில மோதகம்' சுவையாகத்தான் இருந்தது.

என்னைக் காணும் தோறும் கதவை நாடுவது அவளது அன்றுட நிகழ்ச்சியாகி விட்டது. எல்லாப் பொடியன்களும் கடிதம் எழுதுறுங்கள் என்று நானும் ஐந்து பெட்டையளுக்குக் கடிதம் எழுதி இருக்கிறேன். இது எனக்குக் கசப்பான அனுபவமே. காரணம்... ஐந்து பெட்டைகளும் அதிபரிடம் 'றிப்போர்ட்' பண்ணி விட்டார்கள். இதன் காரணமாக மாலினியின் காதலில் கொஞ்சம் நிதானத்தைக் கடைப்பிடித்தேன்.

நேரம் சொல்வதற்காகத் திரும்பிச் சென்றபோது அவளின் முகம் எனக்கு நன்கு தெரிந்தது. அதன் பின் அவள் முகம் நன்கு தெரிவதில்லை. காரணம் எனது சைக்கிள் அவளின் தெருக் கதவைக் கடக்கும் நேரந்தான், அவள் வெளிப்படும் நேரம். காதல் கொண்ட பெண் எதிரே நோக்க வெட்கப்பட்டு, போகவிட்டுப் பார்க்கிறுள்—நான் நினைத்தது இவ்வாறுதான்.

காதல் என்பதற்குப் பிரிவு கட்டாயம் வேண்டும். அப்பொழுதுதான் அது சுவைக்கிறது. இந்த வாக்கியத்தை, எனக்கு அருளிச் செய்தது 'காதலிக்க நேரமில்லை' என்னும் படம். இந்தப் பிரிவை நான் ஏற்படுத்திய விதமே சுவாரஸ்யமானது. சில நாட்களில் அவளின் வீடு அமைந்துள்ள வீதியைப் பாவிக்காது வேறு வீதிகளைப் பாவிப்பேன்.

''நேற்று நீங்கள் வேலைக்குப் போகவில்லையா?'' இவ்வாறு கேட்பாள் மற்றைய நாளில்.

''மற்ற ரேட்டால் போனனுன்.'' — இவ்வாறுதான் பதில் சொல்வேன். தற்செயலாக லீவில் நின்றுலும் இப்படித்தான் கூறுவேன். அவ்வாறு கூறினுல்

அவள் சித்திரவதைப்படுவாள். அதைச் சுவைக்கலாம்.'' இவ்வாறும் எனது அரிவரிப் புத்தகத்தில் படித்திருக்கிறேன்.

நான் வேலைக்குப் போகாதமையை விசாரிக்கும் அளவுக்குக் காதல் கொண்டிருந்த மாலினியை நான் மேலும் காதலித்தேன்.

மாலினியிடம் காதல் ஏற்பட்ட பின்னர் போயா தினங்களும் எனக்கு வேலை நாட்களாகின. இவற்றை வேலை நாட்களாகச் சிபார்சு செய்தது, முதலாளியல்ல. ஆகவே 'லேபர் ஒபிஸில்' தகவல் கொடுத்துவிடாதீர்கள்.

எல்லாப் போயா தினங்களிலும் நான் யாழ்ப்பாணம் போவதில்லை. திடீரென ஒரு போயா நாளில் 'மாலினி வீதி'யால் பிரயாணம் செய்வேன். அவளது காதலை எடைபோடும் பொருட்டே திடீரென, ஒரு போயா நாளில் நான் பிரயாணம் செய்வது. அந்த நாட்களில் மாலினி காட்சி தரமாட்டாள். ''நான் வேலைக்குப் போகாத, லீவு நாட்களில் மாலினி படலைக்கு வரமாட்டாள்'' என்பதை அறிந்து எனது காதலை 'முற்றிலும் நிறைவேறக்கூடியதே' என்னும் பட்டியலின்கீழ்க் கொண்டு வந்தேன்.

மாலினியை நாளைக்கே திருமணம் செய்யவும் நான் தயாராக இருந்தேன். அதற்குரிய உழைப்பும், குடும்ப நிர்வாகத் திறனும் எனக்கு உண்டு. ஆனால் எனது அண்ணன்தான் தடையாக இருந்தார். அவர் மணமாகாதவர். எனவே எனது திருமணமும் கவனிப்பாரற்றுத்தான் இருந்தது.

எனது அண்ணன் என்னைப் போல் ஐந்தாறு பெட்டைகளுக்குக் கடிதம் எழுதி அகப்பட்டவரல்லர். அவர் பள்ளியில் பயிலுங்காலை ஆசிரியர்களின் மதிப்பைப் பெரிதும் பெற்றிருந்தவர். இப்படிப்பட்டவருக்கு எனது காதல் கோபத்தை உண்டாக்கிவிடுமோ என்றும் நான் அஞ்சுவதுண்டு. எனது அண்ணனும் மாலினி வீதியிலுள்ள ஒரு பாடசாலையிற்றான் படிப்பிக்கின்றார்.

அண்ணன் பாடசாலைக்குப் புறப்படுமுன் நான் புறப்பட்டுவிடுவேன்.

* * *

ஒருநாள் வேலை விட்டு வந்ததும் சந்தோசகரமான செய்தியொன்று காத்திருந்தது. அண்ணன், திருமணத்துக்குச் சம்ம

### கவலை

''நான் எவரையும் மனதால்கூட நினைத்ததில்லை அத்தான். உங்களைத்தான் முதன் முதலாகக் காதலிக்கிறேன்.''

''ஏன் கண்ணே அதைப் பற்றியெல்லாம் இப்போதே கவலைப்படுகிறாய்?''

தித்துவிட்டதாக அன்னை உரைத்தாள். அப்படியாயின்... அடுத்தபடி திருமணம் செய்ய வேண்டியவன் நான்தானே. எனக்கு மிக்க மகிழ்ச்சி. அண்ணனின் திருமணம், எனது திருமணம் போற்றுன் இருந்தது.

''அண்ணனின் திருமணம் சமீபிக்கின்றது. உனது திருமணம் தொடரப் போகிறது. இனியும் தாமதிக்காதே. மாலினியிடம் உனது உள்ளத்தைத் திறந்து காட்டு. எனது காதலைத் தெரிவிக்க ஆண்டவனே சந்தர்ப்பம் அமைத்தான்.

ஒருநாள் மாலினியின் வீட்டை நெருங்கும் போது சைக்கிளுக்குக் காற்றுப் போய்விட்டது. படலையில் நின்ற மாலினி அழைத்தாள். போனேன். காற்றடிக்க 'இன்பிளட்டர்' (Inflator) தந்தாள். அவள் தனது உள்ளத்தையும் சேர்த்துத் தந்தது போலிருந்தது.

''உங்கள் விலாசமென்ன ?'' மாலினி கேட்டாள். எனது வியாபார ஸ்தாபனத்தின் விலாசத்தையே அளித்தேன்.

## முத்திரைக் கதை

கதாசிரியர்: கதையுடன் முத்திரை வைப்பது அவசியமா சார்?

பத்திரிகாசிரியர்: ஓ! கதை வைக்க வேண்டியதைவிட!

மறுநாளே மாலினியிடமிருந்து கடிதம் வந்தது. கடிதத்தின் கடைசிப் பகுதி இதோ.


......... எல்லாருக்கும் அச்சகத்தில் உருவான திருமண அழைப்பிதழ்களைத்தான் அனுப்பினேன். ஆனுல் எங்கள் காதலுக்குக் கடிகாரமாகப் பணி புரிந்த உங்களுக்கு எனது கைஃழாலேயே எழுதுகிறேன். கட்டாயமாக எனது திருமணத்தில் கலந்து கொள்ளுங்கள்.

இப்படிக்கு,

அன்புள்ள சகோதரி

மாலினி.

நான் மாலினியின் வீட்டைக் கடந்து சிறிது தூரம் சென்றதும் ஒரு வாலிபர் வருவாராம். இருவரும் மனமொத்த காதலர்களாம். என்னை மையமாகக் கொண்டே, அந்த வாலிபரை எதிர்கொள்ள அவள் படலைக்கு வருவாளாம். நான் வேலைக்குப் போகாத நாளில் காதலரை எதிர்கொள்ள அவளால் முடிவதில்லை. அந்தக் காதலன் 'மாலினி வீதி'யில் ஆசிரியராகக் கடமையாற்றும் எனது அண்ணன்தான் என்பதை அறிந்ததனுல், எனது காதலைத் தாராளமாகவே தியாகம் செய்தேன். மணிக்கூட்டுக்கு வழியற்ற மாலினிக்குத் திருமணப் பரிசாக எனது கைக்கடிகாரத்தையே அளித்தேன்.



# பிரபஞ்சப்பூ

★

நிறமற்றுப் பேதமற்றுக் கலப் பற்று நின்ற உயிர் ஒன்று, ஆத்மா ஒன்று தன் தூயதும் அகண்ட விசாலத் தத்துவத்தையும் மயி ரிழையாய் அதனிலும் இளை யாய்ச் சுருக்கி அவள் வயிற்றில் புகுந்து நின்று அதுவே அவளாய் மாறிச் செழித்து மலர்ந்தது.

உயிர்ப் பூ.

தொட்டிலிற் கிடந்த குழந்தை சிரித்தது. பனியில் தோய்ந்து நிற்கிற செம்ரோஜாவின் மெத் தென்ற இதழ்கள்போல் குழந் தையின் இதழ்கள். கவி பொது வாய்க் காணுகிற பரிசுத்தம் நிரம்பிய தெய்வத் திருவிழிகள். கைளும் கால்களும் மண்ணில் நிற்கிற மயக் கங்களின் சுவடு பிடி படாமல் நிற்கிற பரி சுத்தத்தில் தெய்வத் தன்மையோடு நிற்கின் றன. புதிதாய் அடை பட்டுப்போன 'ஆத்மா' தனக்கே உரித்தான ஒளியை அங்கமெலாம் செலுத்திக் கிறங்கிக் கொண்டிருந்தது.

'வீல்'......முதல் குரல் இல்லை இது பழைய குரல். தப்பித் தப்பி எங்கெங்கோ பிறந்து எதனாலோ ஆண்டும் ஆளப்பட்டும் அனுப வித்தும் அனுபவிக்கப் பட்டும் நிற்கிற ஒரு சக்தியின் பழைய குரல். மனிதனின் குரல்.

தொட்டிலின் முன்னே வியப் பையும் தன் அணுவொன்றின் பிரதிபலிப்பையும் பார்த்த படியே நின்ற அவரின் கண்களில் எதெதுவோ பிறந்தும் தேய்ந் தும் போய்க்கொண்டிருந்தது. அவர் சிரித்தபடியே தனது விரல் களால் மெதுவாய்த் தொட் டார். குழந்தை சிரித்தது.

'சாந்தினி...... சாந்தினி.'

...அந்தப் பெயரின் இதத்தை நெஞ்சில் நிறுத்தி அணு அணு

'முனியப்பதாசன்'

வாய்ச் சுவைத்தபடியே சிரித்தார்.

பக்கத்தே கட்டிலில் கிடந்த சத்தியபாமா கேட்டாள்:

''என்ன பெயர் வைக்கப் போகிறீர்கள்?''

'சாந்தினிதேவி'—

'எந்தச் சாந்தினிதேவி'— அவள் ஆச்சரியத்துடன் கேட்டாள்.

மரமாயும் மலராயும் நீராயும் நிலனுயும் தோன்றும் உயிர்க் கருவறையில் இருந்தும் கணந்தோறும் அரும்பவிழும் பலநூறு சாந்தினிகள்தான். உடல் சேர்க்கும் பற்றற்று உயிர் தூண்டும் உணர்வின் நெகிழ்வில் கசியும் பற்ருேடு பார்த்தால் எல்லாமே இவள் தான். இவளில் எல்லாம். ஞானிகள் பேசுகிருற்போல எல்லையற்றுப் பாயும் உயிரின் ஊற்றின் கரு 'இவளுள்ளும் தான் ஓடுகிறது......'
பிறகு......நீ.

அவள் தேம்பி அழுதாள்.

அவளுள் பொறி தட்டிற்று. அவருக்கு நோய் என்பதாக அவள் எண்ணம். ஒவ்வொருவனும் போட்டி போட்டுக் கொண்டு அதையும் இதையும் எதையும் சம்பந்தா சம்பந்தமில்லாமல், பொருத்தம் பொருத்தமில்லாமல் வறுகிக் குமிக்க நினைக்கிறபோது இந்த மனிதர் மட்டும் அந்த நாளையிலிருந்து இன்று வரையும் இந்த மாதிரித்தான் பேசிக்கொண்டிருக்கிருர். இது ஒரு நோயில்லாமல் பிறகென்ன.

அவள் மிரள மிரள விழித்தபடியே பார்த்தாள்.

தொட்டிலில் குவிந்த அவர் விழிகள் ஒவ்வொன்ருய் நெஞ்சில் தேங்கிச் சுவைத்த படியே அவள் பார்வையை நோக்கிப் பதிந்தது. அவன் கண்களில் எதனுலோ ஒரு நாணம். கூசியும் குறுகியும் பார்க்கிருற் போலக் கூடப் பட்டது.

'சாந்தினி.'

அவள் பிரமை நீங்கிற்று.
மண்ணின் சம்பந்தத்தை, தான் என்கிற தனித்துவமான மனிதர்களின் பந்தத்தை நிலை நிறுத்துகிற பெயர். எப்படியிருந்தாலும் அவரும் மனிதர் தான். மண்ணேடு சம்பந்தப் பட்ட ஆசைகள் அவருள்ளும் தான் இருக்கிறது.

''பாமா, உனக்குப் பெயர் பிடித்திருக்கிறதா?''

அவள் பிரமை முற்ருய் நீங்கிற்று.

இலேசாய்க் குறும்பாய்ச் சிரித்தாள்.

''நீ ஒரு குழந்தை. குழந்தைக்குக் குழந்தை. குழந்தை என்கிற படியைக் கடந்தும் குழந்தையாய் நிற்கிறகுழந்தை.'' சிரித்தபடியே அவர் தொடர்ந்து

சொன்னூர்: 'உன்னில் அவள். அவளில் நீ, நான்......'

அவள் மீண்டும் விம்ம ஆரம்பித்து விட்டாள்.

அவர் தொட்டிலைப் பார்த்தபடியே நின்றூர்.

அவளோ தன் நினைவுத் தொட்டிலைப் பார்த்தபடி நின்றூள்.

## 2

அவள் எதையும் ஏட்டில் கற்றுக் கொண்டவளல்ல. கண் முன்னுல் தெரிகிற எதையும் நிலை நிறுத்தி அசைபோட்டு அதன் சாறுன உயரிய ஞானத்தையும் ஏற்று நிற்கிற ஞானப் பெண்ணுமில்லை. ஒரு பகுதி ஓங்கி ஒரு பகுதி தாழ்ந்து நிற்கிறதுதான் மனித அறிவு. அந்த அறிவு இருதயத்தைத் தொடுகிறபோதுதான் ஆத்மீகம் பிறக்கிறது. அந்த ஆத்மீக கீதத்தின் லயம்பட்ட அமுதமயமான உள் ஒலி எல்லாருக்கும் எப்போதும் கேட்டுக் கொண்டேதான் இருக்கிறது. அந்தக் கீதத்தின் ஓசைஅலைகள் மிதந்து பிரபஞ்சத்தின் தோற்றப் பொலிவில் தொட்டும் தொடாமலும் நிற்கிறபோது, பார்வையாளனின் பார்வையினூடே படுகிற 'புரியாப் புதிர்கள்' அதைச் சீண்டிவிடுகின்றன. பிறகு இசைலயம்.

அவள், சத்திய பாமாவிற்கும் ஒரு நாள் அது கேட்டது.

மலரொன்று இதழ் விரித்து மலர்ந்தது. மாலையில் அது வாடி உதிர்ந்து நின்றது. மறு நாள் புலருகிறபோது நேற்றுப் பூத்த கிளையில் புதிதாய் ஒன்று. நேற்றிருந்தாற் போலத்தான். மாற்றமேயில்லை. அவளுள் ஒரு கேள்வி: எதிலிருந்தும் எது பிறந்தது. நேற்றைய பூவிலிருந்து இன்றைய பூ மலர்ந்ததா? அதே அழகு அதே உயிர், நேற்றைய பூவின் வாடிய மலரின் 'ஆத்மா' அழகு இன்றைய இந்த மலரில் ஒட்டிக் கொண்டதா ? எதிலிருந்தும் எது பிறந்தது. இந்த மலர் நேற்றைய மலரா ? இன்றைய மலரா ? முந்தி பல நூறு ஆண்டுகளுக்கு முன்னுல் பிரபஞ்சத்தில் பூத்த புத்தம் புதிய முதல் மலரா? எது?

அது அவளுக்குப் பைத்தியமாகிவிட்டது. அதுதான் பேச்சு. அதுதான் நினைவு. பார்வை எதனிலும் பதிகிறதாக இல்லை. நேற்று—இன்று—நாளை இவற்றில்தான் உலகம். இதன் உயிர் ஒன்று பலவா ? அவளுக்கு 'அவருக்கு எந்த நோய்' என்று விம்முகிறுளோ அந்த நோய் அப்போது பிடித்திருந்தது.

அவள் வீட்டின் முன்னுல் ஒரு தொண்டர் நிலையம். அவளுக்கு அதில் எல்லாம் நம்பிக்கையில்லை. உலகத்திற்கு ஒரு மாதிரி காட்டி விட்டுப்போன ஞானிகளது புறத் தோற்றத்திற்குப் பூப் போட்டுக் கொண்டிக்கிறவர்

கள் என்பதாக அங்குள்ள துறவி களைப் பற்றிய அவள் எண்ணம். உண்மையும் அதுதானே. பார்க்கப்போனல் வாழ்வு முழுமையும் நெஞ்சோடும், உள் ஒலியோடும் நம் ஆத்மீகத் துறவிகள், சங்கரரிலிருந்துஇராம கிருஷ்ணர் வரை, பேசியும் அனுபவித்தும் வந்த மௌன பாஷைகளை யாரேனும் கேட்டுவிட முடியுமா? பிரசாரம் பண்ண முடியுமா? சார்ந்தும்' போற்றியும் வாழுகிறவர்கள் மகான்களின் வாய்மொழிகளுக்குத் தத்துவ விளக்கம் செய்யத் தானே முடியும்.

சத்திய பாமாவிற்குத் தன் குழப்பத்தை— அந்த நோயைத் தீர்ப்பதற்கு அங்கு போவதைத் தவிரவும் வழியில்லை.

இரவு ஆடலும் பாடலும் நறுமணங்களின் பொலிவுமாய் அறையில் விரிந்து கொண்டிருக்கிறது.

அன்று சிவராத்திரி நாள்.
நடராச விக்கிரகம் பளிச் சென்று அறையில் நிற்கிறது. சுற்றவரப் பலர் ஆடுகின்றனர். பேயாட்டம். எதனுள்ளோ அவர்கள் புகுந்து புகுந்து குடைந்து குடைந்து ஆடுகின்றனர். அலுப்பில்லை, சலிப்பில்லை, மலர்ச்சி. மலர்ச்சி.

அவள் அறையின் வாயிற் படியண்டை நின்று வெகு நேரமாய்ப் பார்த்தபடியே நின்றுள். அவள் மூளை குழம்பிற்று.

'ஆடுவோர் யார்? ஆட்டப் படுவோர் யார்? எவர்? எவருள் எவர்? வெறும் குழப்பந்தான். மண்ணில் பிறந்த இரு உயிர்கள் வளர்ந்தபோது வார்த்தைகள் பிறக்கவில்லை. சைகை தான் பிறந்தது. அந்தச் சைகை தான் நடனமா? நடனம். சிவனின் நடனம், முதல் உயிர்களின் நடனம், முதல் பாஷை, காலப் பெருவெள்ளத்தில் நீந்தி நிற்கிற இந்த மனிதர்கள் தேவனின் நடனத்தைத்தான் இன்றைக்கும் ஆடுகிறுர்களா? முதலுயிர்களின் நடனமா? யார் முதலுயிர். நீயா நானு? சிவனு? யார்? என் உள் நீ—சிவன். சிவனில் எல்லாமேயா?

அப்போது அவள் வீரிட்டுக் கத்தினுள்.

இப்போதும் அவள் கண்டத்திலிருந்தும் அந்தக் குரல் பிறந்து விட்டிருந்தது.

அவர் தொட்டிலை விட்டு வேகமாய் அவள் படுத்திருந்த கட்டிலை அடைந்து அவளைத் தொட்டுப் பார்த்தார். அவள் விழித்தாள். அவருள் ஒரு நினைவு பூத்தது.

## 3

**அ**றை வாயிற்படியண்டை நின்றபடியே வெகுநேரமாய்ப் பார்த்துக் கொண்டிருந்த அவளை அவரும் இமை கொட்டாமல் பார்த்தபடி நின்ருர். அவளின் தோற்றம் அவரை உலுப்பி விட்டபடியே யிருந்தது. சமயத்

தைப் பற்றி— 'றிலியஸ் புறப் பென்சிற்றீஸ்' என்று சொல்லு கிற சமய மனோபாவங்களைப் பற்றி ஐரோப்பிய ஞானிகள் எழுதிய நூல்களை அவர் படித் திருக்கிறார். அப்போதிருந்த அவள் தோற்றம் மேற்கத்திய ஞானிகள் 'காரணரீதியாய்' உருக் கொடுக்கமுடியாத பேருரு வாய் நிற்கிறாற்போல இருந்தது. 'மேற்கத்திய சிந்தனைகளோடு கீழைத்தேயத்துத் துறவியின் மனோபாவங்களைச் சித்தரிக்க முடியாது' என்கிற றொமெயின் றோலன்டின் ஆழ்ந்த கூற்றும் அவருள் எழுந்தது.

சமய வாழ்வை ஏற்றுக் கொண்டு ஒரு விவேகானந்தத் துறவியாய் வரவேண்டுமென் கிற தீராத வெறியில் உந்தப் பட்டு அவர் துறவியாய் அந்த மடத்தில் சேர்ந்தார். நாள் போனால் அவர் காணுகிற துறவி களின் உச்சமான சமாதி நிலையில் அவர் கண்டறியாத ஒரு அலாதி யான ஆழ்ந்த இசைலயம் கனிந்த மௌனமும் அவளின் வெறிமய மான தோற்றத்தின் ஊடே புகுந்து நிற்பதையும் அவர் கண் டார். அதில் அவர் கிறங்கி நிற்கிறபோதுதான் அவள் வீரிட் டுக் கத்தினாள்.

சடாரென எழுந்து அவளைத் தொட்டுப் பிடித்தபடியே எத னாலோ தாழ்வாரத்தடிக்கு வந்து விட்டார் அவர்.

பிரிபடாத மௌனம் கவிந்து வெகுநேரமாய்ப் பரவிக் கொண் டிருந்தது. உள்ளே பாட்டும் கூத்தும் நடந்துகொண்டிருந் தது.

பிரிபடாத அந்த மௌனத்தை அவரே முதலில் பிளந்தார்.

"'நீ' யார் என்று நான் அறியலாமா?"

அவள் சிரித்தாள். சிரித்த படியே சொன்னாள்:

"என்னை அறிய நீ யார். நான்தான் முதல் உயிர். பிர பஞ்சத் தொட்டிலில் பூத்த முதல் பூ. உயிர்ப் பூ. அதில் நீ, நான். பல்கிப் பெருகிச் சுமை சுமை யாய் நிற்கும் இன்றைய உயிர் கள். எல்லாமே முதலுயிர். முதலுயிரில் எல்லாம். நேற் றைய பூ. இன்றைய பூ. நாளைய பூ. முதல் பூத்த முதல் பூ. அதில் நான், நீ......"

அவர் குழம்பிவிட்டார்.

மேற்கின் காரணரீதியான முடிபுகளையும் கிழக்கின் உணர்வு மயமான முடிபுகளையும் அசை போட்டபடியே அவர் இப்போ தும் அவளை நன்றாக உற்றுப் பார்த்தார். குழப்பந்தான் மிஞ் சியது. வெறும் குழப்பம்.

அவள் அவளே போலவும் அவ ளில்லைப் போலவும் இருந்தது. அவளுள் முதல் பூத்த உயிர்ப் பூவே தெரிகிறாற் போலவும் அதுவே வேறு போர்வை ஒன்ற னுள் புகுந்து இன்று அவளாய்த் தோற்றம் காட்டிப் பேசுகிறாற் போலவும் அவருக்குத் திடமான

நம்பிக்கையே பிறந்துவிட்டது. 'கீதைத் தத்துவம்' பூரணமாய் உயிர்பெற்று நிற்கிறாற்போலவும் பட்டது.

அவரின் சிந்தனையை அவள் கலைத்தாள்.

''உங்களுக்குத் தெரியாதா ?''

''எதைப் பற்றி?''

''நீ யார், நான் யார் ?''

அவருள் சடுதியாய் ஒரு முடிவு.

'நீ என்றும் நான் என்றும் வேறு வேறு தோற்றத்தில் நிற்கிற உயிர்கள் ஒன்றாய்க் கலக்கிறபோது நீயும் நானும் கலந்துவிடுகின்றன. அந்தக் கலவையில் பிறக்கிற உயிர்ப் பூக்கள் நீயா ? நானா ? என் உள் மனித உயிர் தோன்றிய காலத்திலிருந்தும் உயிர் ஊற்றாய் ஓடிவருகிற பெருநதியின் கலப்பு இருக்கிறது. உன்னில் இருக்கிறது. பிறகு நீயா ? நானா ? நதியா ? நீயும் நானும் என்று தேங்கி எதுவும் நிற்கிறதில்லை. நீயும் நானும் தேங்கி நிற்காமல் உலகம் முடியுமட்டும் ஒட்டுப்பட்டுக்கொண்டே ஓடுவதற்குத்தான் குழந்தைகள் பிறந்தபடியே இருக்கின்றன. அதில், நீயில்லை. நான் இல்லை. பெருநதி. அவற்றின் கலப்பு.

''புரிந்ததா ?''

அவள் தலையை ஆட்டினாள்.

ஒன்றுமே அவளுக்குப் புரியவில்லை.

அவள் போய்விட்டாள்.

## 4

அவர் தூக்கம் பிடிபடாமல் அன்றைய இரவு முழுதும் சிந்தித்தபடியே இருந்தார்.

காலம் காலமாய் இந்திய மண்ணில் தோன்றிய ஒளி முத்துக்களான ஆத்மீகத் துறவிகள் எதனையோ பற்றிப் பேச மறந்துவிட்டதாக அவருள் ஒரு நினைவு முகிழ்த்தது. தெய்வச் சிருஷ்டியின் ஆண் பெண் என்கிற இரு உயிர்கள் பூத்துக்கொண்டேயிருக்கிறபோது 'நீ, நான்' என்கிற பாகுபாடுகள் இல்லை என்று அவர் கருதினார். ஆண் பெண் என்கிற உயிர்களின் புனிதமான கலப்பில் பிறக்கிற 'பசிய புதிய உயிர்ப் பூ'வில் 'நீயும் நானும் சகல உயிருமே' நிறைந்துவிடுகிறதே? 'நான் பிறப்பதுமில்லை, இறப்பதுமில்லை' என்று பகவான் கீதையில் பேசுகிறாற்போல யார் இறக்கிறார்கள், யார் கலக்கிறார்கள், யார் பிறக்கிறார்கள் ? முதலுயிர்தானே ?

'உயிர்ப் பூக்கள் உதயமாகிய திருமணத்தை எதற்காய் கீழைத்தேயத்தின் கம்பீரமாய், இமயமலை என நின்ற இந்தியத் துறவிகள் தூற்றினார்களோ ? அவர்கள் 'மாதிரி' காட்ட வந்தவர்கள். அதைத்தான் அவர்கள் சொல்ல வேண்டுமென்பதற்காய்ச் சொன்னார்களோ ? ஆற்றலும் வேகமும் நிரம்பியதான ஒரு சமூகத்தைச் சிலரையாவது கொண்டு உருவாக்கி, இந்திய நாட்டின் பசியையும் பஞ்சத்தை

யும் அவ்வப்போது போக்கடித்து விட வேண்டுமென்கிற வெறியில் கிளர்ந்த வெறியில் அந்தக் கொடிய விதியைச் சொன்னார் களோ ?

எதுவோ 'அவர்' அந்த முடிவிற்கு வந்துவிட்டார்.

மறுநாள் பொழுது புலர்ந்ததும் அவர் சத்தியபாமாவின் வீட்டிற்குப் போனார்.

திருமணம் நடந்தது.

ஆண்டுகள் நகர்ந்தன.

சத்தியபாமா மாறிவிட்டாள். மண் உலகத்து ஆசைகளும், பற்றும் மனோபாவமும் நிரம்பிய பெண்ணாக மாறிவிட்டாள்.

அவருக்கு அது ஒரு நூதனமாகவே படவில்லை. பல சமயங்களில் பலருக்கு அந்த மாதிரியான 'சமய உணர்வு மனோபாவங்கள்' ஏற்படுகின்றன என்றும் ஆழ்ந்தும் போற்றியும் வந்தாற்தான் அவை நிலைக்கும் என்பதும் அவருக்குத் தெரியும். 'ஒரு காலத்தில் அவள் பிரபஞ்சப் புதிரை அவிழ்க்கத் தொண்டர் நிலையத்தைத்' தேடி வந்தவளா ? என்கிற ஐயுறவு அவருள்ளேயே பல சமயங்களில் எழத்தான் எழுந்தது.

அவர் மட்டும் மாறவில்லை. ஒரு விஷப் பரீட்சையை அவர் செய்தார். உயிர்களின் பேத மற்ற கலப்பில் அவர் ஒரு பேருண்மையைக் கண்டுவிடலாம் என்கிற சடுதியான முடிவிற்கு வந்து செயல்பட்டுவிட்டார். 'அவரது பேருண்மைத் தத்துவம்' வெறும் உணர்வு மயமாய்ப் பார்க்கிறபோது பெரிதாயும் அழகாயும்தான் இருந்தது. நடைமுறையிலோ ? மண்ணோடு சம்பந்தப்பட்டு முழுதும் மண்ணாய் நிற்கவேண்டிய அவசியங்கள் பிறந்து கொண்டேயிருந்தன. அப்போதெல்லாம் 'இராமகிருஷ்ண பரமஹம்ஸருக்கும் சாரதா தேவியாருக்கும்' இருந்த உணர்வு மயமான தொடர்பின் வலிமை மிக்க ஆத்ம சக்தி அவரைக் கொன்றது.

நெடுநாள் கழித்துக் குழந்தையும் பிறந்தது. தொட்டிலில் கால்களையும் கைகளையும் மெதுவாய் ஆட்டியபடியே இதோ அழுகிறது.

'குவா...... குவா......'.

## 5

அவர் கைகளில் அவள் சரிந்து வாடிய பூக்குடலை போலக் கிடக்கிறாள்.

'சாந்தினி'

'ஏன்' என்று அவள் கேட்டாள்.

அவர் பொறி கலங்கிப் போனார். ''உன் பெயர் அதுவா? குழந்தையின் பெயரை நினைவு

தப்பிப்போய் உன் பெயர் என்று கூப்பிட்டால் நீ 'ஏன்' என்கிருயே?''

அவர் உலகத்து மனிதராய்ப் பேசினுர். அவருக்கு 'நோயில்லை'.

அவள் சிரித்தாள்.

முன்பு அவள் பையித்தியக்காரி போல இருந்த காலத்தில் பிறந்தாற் போன்ற சிரிப்பு.

அவர் பயந்துபோனுர்.

'சாந்தினி'...... இல்லை, இல்லை. 'சத்தியபாமா'.

''இல்லை ...... இல்லவேயில்லை, நான்தான் 'சாந்தினி' நானே அவள். அவளே நான். நானும் நீயும் தேய்ந்து பிறந்தது குழந்தை. புதிய உயிர். அதில் நீயில்லை, நான் இல்லை. அது தான் சாந்தினி. அதுதான் நான், நீங்கள், அதுவுமில்லை, முதலுயிர். மண்ணுலகத்தில் தோன்றிய முதலுயிர்.''

''நான்தான் 'சாந்தினி' ''

சொல்லுங்கள்.

''நீதான் முதலுயிர்''.

அவள் சரிந்து விழுந்தாள்.

அவர் மண் உலகத்து மனிதராய் அழுதார்.

'நான் பிறப்பதுமில்லை, இறப்பதுமில்லை' என்கிருற்போலத் தொட்டிலிற் கிடந்த குழந்தை சாந்தினி சிரித்தாள். ●

## விமர்சனப் போட்டி

இவ்விமர்சனப் போட்டி நம் வாசகர்களைப் மிக உயர்ந்த கலா ரசிகர்களாகவும், தரமான வாசகர்களாகவும் உருவாக்க வென்றும், திறமிக்க புலமையான ஈழத்து இலக்கியப் படைப்புகளை வெளிநாட்டாரும் வணக்கஞ் செய்ய வேண்டும் என்றும் நடாத்தப்படுகின்றது

நாம் இங்கு அறிவிக்கும் சிறுகதைத் தொகுதியில் உங்களுக்குப் பிடித்த மிகச் சிறந்த கதையைத் தெரிந்து அது ஏன, எதற்காக, எப்படி சிறப்பான அந்தஸ்தைப் பெறுகிறதென விமர்சன ரீதியில் புள்ஸ்காப் தாளில் இரண்டே பக்கங்களில் எழுத வேண்டும். பிரசுரமாகும் ஒவ்வொரு கட்டுரைக்கும் ரூ. 5/- பரிசளிககப்படும்.

இம்மாதத்துக்கான தொகுதி இதுதான்:

### நிறைநிலா

நூலாசிரியர்: இ. நாகராஜன் ✻ விலை 3 ரூ.

கிடைக்குமிடம்: தனலக்குமி புத்தகசாலை
சுன்னுகம.

முடிவு திகதி: 30-11-66.

# பேரும் பரிசும்—13.

## சரியான விடைகள்.

1. ஈழத்துச் சிவானந்தன்.
2. சத்யன்.
3. கௌரி.
4. குகன்.
5. லட்சுமிமணாளன்.
6. செம்பியன் செல்வன்.

**முதற் பரிசு: 10 ரூபா.**

க. சிவராசசுந்தரம்,
தங்கமலர் பவனம்,
பளை.

**இரண்டாம் பரிசு: 5 ரூபா.**

ஆர். சந்திரன்,
மகேஸ்வரகிரி,
சாவகச்சேரி.

**மூன்றாம் பரிசு: கலைச் செல்வி சந்தா.**

எஸ். எம். எம். லாபிர்,
பாத்திமா றைஸ் மில்,
முல்லேகம,
அம்பத்தென்னே.

**ஆறுதற் பரிசுகள்:**

1. திருமதி. J. செல்வத்துரை, மணி பவணம், சண்டிருப்பாய்.
2. S. முத்துராசா, வட்டு கிழக்கு, வட்டுக்கோட்டை.
3. மா. பூமாலசிங்கம், அல்லாரை, கொடிகாமம்.
4. செல்வி பவானி கந்தையா, 205, இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி.
5. பொ. ஜெயக்குமாரன், "பொன்னகம்", மல்லாகம்.
6. செல்வி A. சந்தானலட்சுமி. 2-ம் வாட், மண்டை தீவு.
7. சு. வேலாயுதபிள்ளை, 41, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.
8. இரா. சிறீதரன், 20, 2-ம் குறுக்குத் தெரு, மட்டக்களப்பு.
9. ஐ. முருகையா, சூராவத்தை, சுன்னாகம்.
10. செல்வி செ. செல்வநாயகி, 63, நும்பகொடை, பாலங்கொடை.
11. இ. இராசசிங்கம், தும்பளை, பருத்தித்துறை.
12. மு. காளித்தம்பி, மீன்பிடிக் கூட்டுத் தாபனம், பருத்தித்துறை.

# துணை ஏனோ?

பூவரும் பைப்படி பொன்தளி ரைப்படி
புத்தகத் தைப்படி, தோழா — அதை
யாவரும் இப்படித் தான்படித் தாரெனும்
எண்ணத்தை நீஇடி, தோழா!

நீபடி நீபடி; நெஞ்சைத் திறந்ததை
நேர்படி யேபிடி, தோழா — பிறர்
"வா, படி இப்படி" என்று வரைந்த
மயக்கிடி யப்படி, தோழா!

முல்லை சிரித்துப் பலப்பல நல்லெழில்
மூண்டழைக் கின்றது, தோழா — அதன்
நல்லெழில் தன்னிலே உன்னை மறந்திட
நான்துணை வேணுமோ, தோழா?

'இப்படி இப்படி முல்லை அழகிய'
தென்னும் கணக்குடன் போனால் — அவள்
அப்பொழு தப்பொழு தள்ளி வழங்கும்
அழகு வழிந்திடும் வீணாய்!

புத்தகம் என்பது புத்தம் புதியகம்
போது தொறும்புதி தாகும் — அது
எத்தனை யோதரம் நீபடித் திட்டபின்
இத்தர மும்புதி தாகும்!

கண்டு களித்திடக் காகித ஏட்டிலே
கட்டிய கோட்டையே நூலாம் — அது
கொண்டு களிப்பவர்க் கின்னிசை வீணையைக்
கூட்டியே வைத்தது போலாம்!


மீட்டிடு வீணையை, வித்தக வீணையை
மெல்லவே மீட்டிடு தோழா — அது
நீட்டிடும் பல்சுவை நாதக் குளுமையை
நெஞ்சிலே கேட்டிடு தோழா...

உன்னை மறந்தொரு புத்தம் புதியபண்
உன்னகத் தூறிட வேண்டும் — நீ
என்னை அவனை எவனையு மேதள்ளி
ஈடுபட் டேறிட வேண்டும்!

நாழி, படிகளை அள்ளிக்கொண் டேஉயர்
ஞானத்தின் முன்புசெல் வாயோ? — ஏ,
பாழிலே பாழ்கள் மகிழ்ந்து கிடப்பதை
மண்டையை கொண்டளப் பாயோ?

●

சாலை இளந்திரையன்




**மா**ணவர்களே !

நீங்களனுப்பும் கட்டுரைகள், கவிதைகள் எல்லாம் இடம்பெறவிருக்கிறது. 'எனது இலட்சியம்' கட்டுரைப் போட்டி முடிவு திகதி **30-11-66.** அனைவரும் உற்சாகத்தோடு பங்குபற்றுங்கள். —**ஆசிரியர்.**

# தமிழ் சுருக்கெழுத்துக் கலை

✻ **த. ஜெயதேவன்**

இந்தச் சுருக்கெழுத்துக் கலைக்குள்ளும் பல முறைகள் இருக்கின்றன. ஆங்கிலத்தில் பல முறைகள் இருந்தாலும் பிட்மன் முறை மேலோங்கி இலங்கையில் வளர்ந்துவிட்டது. தமிழ் சுருக்கெழுத்தில் இலங்கையில் இரண்டு முறைகள் தான் பிரசித்தி பெற்றன. பிட்மன் முறை, சுப்பிரமணியம் முறை என்பவையே இவையாகும். பல பத்திரிகைகளில் இம்முறையைப் பற்றி ஆதரவாளர்கள் விவாதித்துக் கொண்டே போகிறார்கள். வே. வா. வேலுப்பிள்ளை அவர்கள் பிட்மன்ஸ் முறை மூன்று பாஷைகளிலும் இருக்கின்றன என்றும் தமிழ் பிட்மன் சுருக்கெழுத்து 50 வருடங்களுக்கு முன் பிறந்தது என்றும், தான் 45 வருடங்களாக அதைக் கற்பிப்பதாகவும் கூறுவார். பிட்மன் சுருக்கெழுத்து 50 வருடங்களுக்கு முன் ஸ்ரீனிவாசராவ் என்பவராலும் எழுதப்பட்டது என்றும் சுப்பிரமணியம் சுருக்கெழுத்து கிட்டத்தட்ட 10 வருடங்களில் ஆரம்பிக்கப்பட்ட க. தொ. நு. பாடசாலையில் தான் இலங்கையில் முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்டது என்றும் பிட்மன் 45 வருடமாக தான் கற்பிப்பதாகவும் திரு. செ. நடராசா கூறுகிறார். இதற்கு ஒரு முடிவு கட்டவேண்டுமானால் ஒரு போட்டிப் பரீட்சையை வைத்து முடிவு கட்டலாம். பிட்மன் சுருக்கெழுத்து ஆதரவாளர்கள் அதற்குத் தயாராக இருப்பதாகச் சொல்கிறார்கள். திரு. வே. வா. வேலுப்பிள்ளை தான் பத்திரிகையில் எழுதியபடி நிமிடத்துக்கு 80, 90 சொற்கள் தம் மாணவர்களைக் கொண்டு எழுதிக்காட்டுவதாகவும் சொன்னார். சொற்கள் கணிப்பதிலும் சிலவேளைகளில் இரு முறைகளுக்குமிடையில் வித்தியாசமிருக்கலாம் என நினைக்கிறேன். ●

## 'ஷா'வின் வாழ்வில்

✻ சிந்தனைச் செல்வன்

யோண் பெக் ஒரு நாள் ''ஷா''வைக் கண்டார். என்னய்யா உங்கப்பன் குடித்துத் தொலைக்கிறாரே, செலவெல்லாம் கட்டுப்படியாகுமா, என்றார். 'ஷா'வுக்கு சிறிது அவமானமாகத்தான் இருந்தது. என்றாலும், அவர் விடவில்லை. ''பரவாயில்லையே, என் தந்தை எவ்வளவு தூரம் குடிக்கிறாரோ, அவ்வளவுக்கு, நான் சம்பாதிப்பேன்'' என்றார்.

''ஷா''வுக்கு திருமணம் பதிவு செய்ய வேண்டிய நாள் வந்தது. நண்பர்கள் இருவர் சாட்சிக்காக ''ஷா''வுடன் சென்றனர். பதிவு அதிகாரி, நண்பர்களில் ஒருவர்தான் மணமகன் என்றும் திருமணக் கூட்டத்தின் நடுவே காட்சி தரும் பிச்சைக்காரன்தான் ஷா என்றும் எண்ணி இருந்தார்.

நண்பர் ஒருவரின் சாட்சியத்தின்போதுதான் 'ஷா'தான் மணமகன் என்று அறிந்தாராம். அவ்வளவுக்கு 'ஷா' எளிமையான சீவியம் சீவித்தார். தன் திருமணத்தைப் பற்றி ஓரிடத்தில் எழுதியபோது, எனக்காக என்பரிசை நண்பர் விட்டுக் கொடுத்தார் என்று குறிப்பிட்டுள்ளார்.

## யாழ்ப்பாணம்

— திருமலைத் தம்பி —

இலங்கை என்னும் மணித்தீவில்
இளமை என்னும் எழிலுடனே
பழமை வாய்ந்த நகராக
பாங்குடன் விளங்கும் யாழ்நகரே.

தரணி யெங்கும் ஆண்டவனும்
தமிழன் வாழும் நகராகும்
வளங்கள் மிக்க நன்னகராம்
வல்லோர் வாழும் பொன்னகராம்.

பனைகள் நிறைந்த யாழ்நகராம்
பாவலர் பிறந்த பழநகராம்
நாவலர் வாழ்ந்த நன்னகராம்
நாடோர் புகழும் யாழ்ப்பாணம்.

## பொன்மொழிகள்

ஆ. ப. சந்திரநாதன்

ஒருவன் புலியை வேட்டையாடும் பொழுது அதை விளையாட்டு என்கிறான். புலி ஒருவனை வேட்டையாடும்பொழுது அதனை மிருகத்தனம் என்கிறான். —பெர்னாட்ஷா

தங்கள் குறைபாடுகளுக்காகப் பிறரைத் தூற்றுவதால் எந்தத் தீமைகளையும் போக்கிவிட முடியாது. —நேரு

# அங்கத்தவர் பட்டியல்

16. சி. கிருஷ்ணமூர்த்தி, செங்குந்தா கல்லூரி, திருநெல்வேலி.
17. வி. ஸ்ரீதரன், மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம்.
18. இரா. குமாரகுலசிங்கம், இந்துக் கல்லூரி, மானிப்பாய்.
19. ஞான. ஞானகுணாளன், மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம்.
20. வே. சிறீதரன், சந்திரபுர ஸ்கந்தவரோதய வித்தியாலயம்.
21. ப. சற்குணராசா, இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம்.
22. செ. தர்மராசா, இந்துக் கல்லூரி, வட்டுக்கோட்டை.
23. ஆர். சந்திரன், டிறீபேர்க் கல்லூரி, சாவகச்சேரி.
24. கந்த. ஞானமுத்தன், ஞானம்ஸ், கைதடி தெற்கு.
25. சி. கந்தசாமி, வற்ருப்பளை, முள்ளியவளை.
26. க. நித்தியானந்தன், இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம்.
27. செல்வி மு. பத்மாவதி, மகாஜன கல்லூரி, யாழ்ப்பாணம்.
28. ஐ. முருகையா, மயிலணி சைவ வித்தியாசாலை, சுன்னுகம்.
29. வி. ஸ்ரீஸ்கந்தராசா, செங்குந்தா கல்லூரி திருநெல்வேலி.
30. செல்வி செ. மகேஸ்வரி, 63, தும்பகொடை, பலாங்கொடை
31. எம். அப்துல் ஜபார், மகாவித்தியாலயம், கிண்ணியா.
32. சி. சண்முகலிங்கம், இந்துக் கல்லூரி, திருகோணமலை.
33. ரா. இராஜலிங்கம், சென்மேரிஸ் கல்லூரி, தியத்தலாவ.
34. சேது. சிவராசரட்ணம், அரசினர் கல்லூரி, மட்டக்களப்பு.
35. க. கனகசிங்கம், மகாவித்தியாலயம், மூதூர்.

## கலைச் செல்வி — மாணவர் உலகம்

அண்ணு !

மாணவர் உலகத்தில் என்னை ஓர் உறுப்பினராகச் சேர்த்துக்கொள்ளவும். தங்களின் சட்டதிட்டங்களுக் கமைய நடப்பேன் என்பதற்கு உறுதியளிக்கிறேன்.

பெயர்: ..........................................................................

பாடசாலை : ..................................................................

..........................................................

பிறந்த திகதி: ........................

வயது: ............ ..................................

கையொப்பம்

ஐப்பசி, 1966.

நாவல்



# கர்ப்பக் கிருகம்

"செம்பியன் செல்வன்"

7

## முடிச்சுக்கள் ....

நிர்மலமான நீல வானத்தில் மிதக்கும் வெண்பஞ்சுத் துணுக்குகளை உள்வாங்கிய நிலையில் வைரப்படிகமாக சலனமற்று கிணற்று நீர் உறைந்து விளங்குகின்றது. இயற்கையின் மோன மொழி ஓசைஎழும்பாமலே, பச்சை மரம், பச்சை உயிர்கள் நீர்த்தரங்கம், எங்கும் வியாபித்துக் கொண்டிருக்கின்றது. மெல்லிய குளிர்காற்று மெல்லன வீசுகின்றது. ஆடுகாலில் இருந்து உதிர்ந்த பூவரசம்பூ ஒன்று குடைராட்டினமாகச் சுழன்று சுழன்று கிணற்று நீரில் கீழிறங்குகின்றது.

சலனம். அழகுச் சிதைவு.

சலனமடையாதவரை எதுவுமே அழகுதான். பிரபஞ்சமும் அழகுப் பூதான். சலனமடைந்துவிட்டால் அழகே அலங்கோலம்தான். மனித வாழ்வாகிய சலனமாகிய இயக்கமே சலனமடைந்து விட்டால்...

புயலும், பூகம்பமும்தான்.

கணபதிப்பிள்ளை ஆழ்ந்து அனுபவிக்கும் காலம் ஒன்றுண்டானல் அது இந்தக் காலைப் பொழுது ஒன்றுதான். அவரின் பரபரப்பான வாழ்க்கைப் போராட்டத்தில் உலகைப் பார்க்கக் கிடைக்கும் பொழுதும் அதுதான். பொழுதான பொழுது அவரறியாமலே உருவாகி, பரிணாமமாகி, உருச்

சிதைந்து மீண்டும் உருவாகிக் கழிந்துவிடுகிறது.

வீடு இன்னும் விழித்துக் கொள்ளவில்லை. அவர் எழுந்து இரவில் படுக்கும் முன்னர் அணைத்துவிட்டு பாயின் தலை மாட்டின்கீழ் வைத்த குறைச் சுருட்டையும், கிலுகிலுக்கும் நெருப்புப் பெட்டியையும் எடுத்துக்கொண்டு அடிவளவுக்கு விரைவார். காலைக் கடனை முடித்து கால்கழுவ கிணற்றடிக் குச் செல்லும்போது இந்த அழகுக் காட்சி அவருக்குத் தென்படும்.

ஆடுகால் மரங்களிலும், வேலியிலும் அணில்களும், 'புளுனி'ப் புட்கூட்டங்களும் விளையாடிக் கிலுகிலுக்கும் ஓசை யைக் கேட்கும்போது உள்ளமே பரவசமாகி — உடல் காற்றாகி விட, மனதில் குளுமை சொரி யும். அவர் அப்படியே மெய் மறந்து நிற்பார்.

இது அவரது நாளாந்த நித்திய கருமம். அவர் தனது தொழி லுக்குச் செல்வதற்கு அந்தவேளை யிலேயே எழுந்துவிட வேண்டும். அவர் தொழில் செய்யும் சுருட் டுக் கொட்டில் வீட்டிலிருந்து மூன்று மைல் தூரத்திலிருந்தது. அந்த வேளைக்கு எழுந்து சென் றால்தான் நேரத்திற்குப் போய்ச் சேர முடியும். அவர் எழுவதும் வேலைக்குப் போவதும் வீட்டில் ஒருவருக்கும் தெரியாமல் ஆழ்ந்த துயிலிலிருப்பர். சில சமயங்களில் அவர் எழும் சமயங் களில் மனைவி கற்பகம் விழித்துக் கொண்டால் சூடாகக் 'கோப் பித் தண்ணி' கிடைக்கும். ஆனால் வீட்டின் சுமையை நாள்தோறும் பராமரித்த களைப்பில் கிடக்கும் அவளை எழுப்பவும் அவருக்கு மனம் வராது. ஓர் அனுதாபப் பார்வை எறிந்துவிட்டு விரைந்து விடுவார்.

அவர் வீட்டைக் கடந்து மூலைப்பிள்ளையார் கோவிலைக் கடந்து அடுத்த சந்தியில் கால் வைக்கும்போது சிவலிங்கத்தின் 'தேத்தண்ணிக் கடை'யின் பொயிலர் 'உஷ்' என்று இரைந்து கொண்டிருக்கும். அவரால் அங்கு நிற்காமல் காலடி எடுத்து வைக்க முடியாது. சிவலிங்கத் தின் முதல் வாடிக்கைக்கார ரவர். அதன் பின்னர் காலை எட்டிப் போட்டார் என்றால் நேரகாலத்தில் கொட்டிலில் போய் நிற்பார்.

அங்கு தூள் குவியல்கள், காப்பிலைப் புகையிலைகள், நூற் கட்டை எல்லாம் அந்தந்த இடத்தில் ஆட்களுக்குத் தகுந் தாற்போல் பிரித்து வைக்கப் பட்டிருக்கும். அவர் தன்னிடத் தில் போய் அமர்ந்தார் என்றால் அவ்வளவுதான். கருமமே கண் ணாகி விடுவார். எட்டு மணி போல் விதவை மீனாட்சி பலகாரம் கொண்டு வரும் போதும், மத்தியானம் உணவு அருந்தப் போகும் போதும் அவரின் தவம் கலையும். மற்றப்

படி அவர் தனது வேலையை முடித்து கைகால் கழுவி வீட்டுக்குப் புறப்படும்பொழுது மாலை ஏழு மணியாகிவிடும். பின் வீட்டுக்கு வந்து சாப்பிட்டு விட்டுப் படுக்க இரவு பத்து மணிக்கு மேலாகி அடுத்த வீட்டு வானொலியில் நேயர் விருப்பம் கேட்கும். வீட்டுக் கருமங்கள் அனைத்தையும் கவனிப்பது எல்லாம் அவரின் மனைவிதான்.

ஆனால் இன்று கணபதிப்பிள்ளை வழக்கத்திற்கு மாறாகப் பரபரத்துக் கொண்டிருக்கிறார். வீடும் விழித்து விட்ட கலகலப்பு தெரிகின்றது. 'ஆவாவ்' வென்று நாலுவாளி தண்ணீரை அள்ளித் தலையிலே ஊற்றிக்கொள்கிறார். நீர்த்திவலைகள் நாற்புறமும் சிதறுகின்றன.

'அப்பனே புள்ளையாரே! இதை நல்ல படியாய் நடத்திக் கொடுத்திடு. என் வீட்டில் நடக்கப் போற முதல் சுபகாரியம்!' —என்ற இறைஞ்சலில் மனம் ஈடுபடுகின்றது.

இது நல்லபடி நடக்காம இருக்குமே... யாரவள் என்ர தங்கச்சிதானே... கனகு என்ரை தங்கச்சி புள்ளைதானே. இதில நடக்காமவிட என்ன இருக்கு... சே...சே... இதுகளைச் சொல்ல முடியாது... இது ஈசுரகாரிய மல்ல...

— தலைகளிலே நீரருவி சொரிகின்றது. அவர் மனம் அருவியாகி எங்கோ ஓடிக் கொண்டிருக்கின்றது.

அவருக்குத் தன் வாழ்வை நினைக்க நினைக்க வியப்பாக இருக்கின்றது. அவரின் சொந்த ஊர் வாழ்க்கை இப்போது மறந்துகூட விட்டது. ஆனால் அவர் வாழ்க்கைப் பாதையின் தடங்கள் ஆங்காங்கு மின்னவே செய்கின்றன.

அச்சுவேலிப் பக்கத்தில் 'கந்தப்புக் கமக்காரன்' என்றால் இன்றுகூட அங்குள்ள வயது சென்ற விவசாயிகள் 'அவரா?' என்று வியப்பார்கள். கந்தப்புக் கமக்காரனின் வாழைத் தோட்டம் அப்போது மிகப் பிரசித்தம். இவ்வளவுக்கும் அந்தக் கமக்காரனுக்குச் சொந்தமாக இருந்த நிலம்நாலு பரப்புத்தான். அவரே தமது தோட்டத்தில் கமக்காரனாகவும், தோட்டக்காரனாவும் இருந்து உழைத்தார். அதனால் அவரிடம் ஏனைய தோட்டக்காரருக்கு மிக்க மரியாதை.

அவரின் இரு பிள்ளைகள்தான் கணபதிப்பிள்ளையும், தெய்வானையும்.

கணபதிப்பிள்ளை சிறு வயதிலே வீட்டுக்கு அடங்காத பிள்ளையாக இருந்தார். பாடசாலைக்கு அனுப்பினால் — ஆள் குளக்கரையில் நிற்பார். இல்லாவிட்டால் சந்தைக்குச் செல்லும் மாட்டு வண்டிகளில் இரகஸ்யமாகத் தொற்றிக் கொண்டிருப்பார். சந்தை கூடும் நாட்கள் அவருக்கு நன்றாக இனித்தது. சந்தையில் கிடைக்கும் விதம் விதமான

பலகாரங்களும், 'லாலா'க் கடலைகளும், ஐஸ் பழமும் அவையே வாழ்வாகக் கனிந்தது. படிப்பு வேம்பாகக் கசந்தது.

பொறுத்துப் பொறுத்துப் பார்த்த கந்தப்பு ''படிப்புத் தான் வரவில்லை. வந்து என் தோட்டத்திலாவது எனக்குதவியாக வேலை செய்!'' — என்று தோட்டத்தில் கொண்டுபோய் வைத்தார். ஆனால் அங்கும் அவர் நிலைக்கவில்லை. ஒருநாள் கணபதிப்பிள்ளைக்குச் சரியான அடி. அவ்வளவுதான். ஆள் புறப்பட்டுவிட்டது.

கந்தப்புவும் அவ்வளவாகக் கவலைப்படவில்லை. 'போகட்டும். போய்ப்பட்டு வரட்டும். அப்ப தான் அறிவு வரும்!' —என்று பேசாமலிருந்துவிட்டார்.

கொஞ்ச நாளில் சேதி வந்தது. ஆள் யாழ்ப்பாணத்தில் ஒரு சுருட்டுக் கொட்டிலில் எடுபிடி ஆளாக வேலை செய்கிறார் என்று. அப்படியாவது நல்லா வரட்டும் என்று கந்தப்பு இருந்துவிட்டார். கணபதிப்பிள்ளை யாழ்ப்பாணத்து வாசியாகி விட்டார்.

ஆரம்பத்தில் எடுபிடி ஆளாக இருந்த கணபதிப்பிள்ளை படிப்படியாக ஒரு திறம் சுருட்டுத் தொழிலாளியாகவே மாறிவிட்டார். தொடை 'நுள்ளு'களாலும், புகையிலைக்காம்பு அடிகளினாலும் அவர் அதிக சுருட்டு நுணுக்கங்களைப் பெற்றுக் கொண்டார். தொடக்கத்தில் வேலை கசந்தாலும், அங்கு பரிமாறப்படும் 'பரிபாஷை'களும் உரையாடல்களும் அவர் உள்ளத்திற்கு உவப்பாக இருந்தது. ஆகவே இன்று வாழ்வாகிவிட்டது.

ஆனால் தங்கை தெய்வானையோ ஓரளவு படித்து எட்டாம் வகுப்போடு நிறுத்திக் கொண்ட காரணம் படிப்பு வரவில்லை என்பதற்காக அல்ல. பருவம் வந்துவிட்டதற்காகத்தான். அத்துடன் இன்னொரு காரணமும் இருந்தது. அவள் மச்சான் முறையான சிவபாதம் அப்போதுதான் ஆசிரிய கலாசாலையிலிருந்து ஆசிரியனாக வெளியேறி ஊருக்கே ஆசிரியனாக வந்திருந்தான்.

அவன் ஆசிரியனாக வந்த தின்பின் தெய்வானையை இன்னும் பள்ளிக்கூடத்தில் விட்டு வைப்பது அவ்வளவு மரியாதையாகப் படவில்லை. கந்தப்புக்குத் தனது மருமகன் மேல் அலாதியான பற்று. ஏன் ஒரு மரியாதை. ஊருக்கு ஓர் ஆசிரியனல்வா? அதோடு தன் மகன் படிப்பையே வெறுத்து ஓடியிருக்க, மருமகன் ஆசிரியனாக வந்ததால் மரியாதை பக்தியாகிவிட்டது.

விரைவில் தெய்வானை சிவபாதத்தின் மனைவியாகி விட்டாள். அவர்களின் வாழ்க்கை நிலையும் படிப்படியாக உயர்வடையலாயிற்று.

சிவபாதம் தனது வருமானத்தை மிச்சப் படுத்தி மாமனுரின் கையில் கொடுக்க அவர் நிலம் நீச்சு என்று விருத்தி செய்தார். வீட்டில் ஆடு, மாடு, கோழிப்பண்ணை என்று செல்வம் குவியலாயிற்று. ஊரின் சங்கக்கடை மனேச்சர் பதவி சிவபாதத்தை வலுவில் வந்தடைந்தது. போதாதா அவர் நிலை மாற்றமடைய,

இன்று சிவபாதத்திற்கு ஒரு சூப்பன் கடை, ஒரு ஐவுளிக் கடை, யாழ்ப்பாணத்தில் ஒரு 'சாப்பு'க் கடையும் இருக்கின்றது. ஆனுல் கணபதிப்பிள்ளைக்கோ யாழ்ப்பாணத்தில் நாலு பரப்புக் காணியும் ஒரு வீடும்தான் இன்றைய சம்பாத்தியம்.

சிவபாதத்தின் ஒரே ஒரு மகன்தான் கனகரத்தினம். கொழும்பில் ஒரு 'கிளறிக்கல் சேவன்ட்'. கணபதிப்பிள்ளைக்கு மூன்று புத்திர பாக்கியங்கள். மூத்தவள் ஈஸ்வரி, நடுவிலான் சிவராசா, கடைக்குட்டிவிஜயா. இரு பெண்களும் பெரியவர்களாகி விட்டதிலிருந்து கணபதிப்பிள்ளைக்கு தூக்கமே போய் விட்டது. அவர் ஈஸ்வரிக்கு கனகுவின் மேல் கண் வைத்திருந்தார். அதனுல் அடிக்கடி தங்கை வீட்டிற்குப் போய் வருவார். ஆனுல் தங்கை தெய்வானையோ அவர் கணவரோ அதிகம் கணபதிப்பிள்ளை வீட்டிற்கு வருவதில்லை. எப்போதாவது ஆடிக்கொருக்கா, ஆவணிக் கொருக்கா என வந்து போவார்கள்.

ஆனுல், அவர்கள் மகன் கனகுவோ லீவுகளில் ஊருக்கு வரும் போது அவர்கள் வீட்டிற்கு அடிக்கடி வந்து போவான். அவனும் சிவராசாவும் நெருங்கிய நண்பர்கள். அதனுல் அவனைத் தேடி அடிக்கடி வருவான். அப்படி வருவதிலும் உள்நோக்க மிருக்கும். அவன் அங்கு வரும் வேளைகளில் எல்லாம் அவன் விழிகள் எதற்கோ அலைக்கழிந்து பரபரக்கும். அதற்கேற்றுற்போல் ஈஸ்வரியும் அங்குமிங்கும் சிட்டுக் குருவியாகப் பறந்து கொண்டிருப்பாள். அல்லது அடுப்படிக் கதவிடுக்கினூடாக அவன் படும் அவஸ்தையைப் பார்த்து மகிழ்ந்து கொண்டிருப்பாள்.

கனகுவின் மனத்தை கணபதிப்பிள்ளை வீட்டிலனைவரும் அறிந்திருந்ததால் ஒரு வித பிடிப்பான நம்பிக்கையிலிருந்தனர். அதனுல் கையில் கொஞ்சக் காசு வரட்டும் கல்யாணத்தைமுடித்து விடலாம் என்றிருக்க, நேற்றுக் கேள்விப்பட்ட செய்தி கணபதிப்பிள்ளையை நிலைகுலையச் செய்து விட்டது.

'கனகுவுக்குப் பெண் பார்க்கிருர்களாம். பெரிய பெரிய இடத்திலிருந்தெல்லாம் மாப்பிள்ளை கேட்டுப் போகிருர்களாம்!'

—இனியும் சும்மா விட்டு வைக்கக் கூடாது. கஷ்டத் தோட கஷ்டமா இதைப் பேசி முடித்துவிட வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டார். இன்று வெள்ளிக்கிழமை. நாளும் நல்ல நாள். அதுதான் வழக்க மில்லாத பரபரப்புடன் இயங்கு கிறுர்.

குளித்துவிட்டு வாசலுக்கு வந்து நின்றபோது மனைவியின் குரல் கேட்டது.

''விஜயா! அப்பாட்ட கொண்டு போய் இந்தக் கோப்பி யைக் குடு!''

சில வருடங்களாக — குறிப் பாக பெண்கள் இருவரும் பெரியவர்களானதிலிருந்து கண வனும் மனைவியும் எட்ட எட்ட வாழத் தொடங்கி விட்டனர். வயது வந்த பிள்ளைகளை வைத் துக்கொண்டு தாங்கள் நெருங் கிப் பழகுவது தங்களுக்கும் நல்ல தல்ல, பிள்ளைகளுக்கும் நல்ல தல்ல என்ற அறிவுணர்வே இதற்குக் காரணம்.

''இந்தாங்கப்பா கோப்பி!...'' —இளையவள் விஜயா கோப் பியை நீட்டிக்கொண்டிருக்கி றுள். கோப்பியை வாங்கி ஒரு வாய் அருந்துகிறுர்.

''அப்பாடா!'' — உடலின் தன்மையும்' உட்புகும் கோப்பி யின் இதமான வெம்மையும் மனதிற்கு எவ்வளவு இன்பமாக இருக்கிறது. சுவைத்து அருந் திய அவர் ''சிவராசா எழும் பிட்டாஞ?'' என்று கேட் கிறுர்.

''இன்னும் இல்லையப்பா!... நான் போய் எழுப்பிவிடவா?''

''போ... போய் எழுப்பு... அவனை... இண்டைக்கு எவ்வளவு வேலைகள் கிடக்குது... அவன் இன்னும் தூங்கிக் கொண்டு...''

விஜயா சிவராசாவை எழுப்ப ஓடுகின்றுள்.

அடுப்படியில் விஜயாவின் சப்தமும், சிவராசாவின் குர லும் பலமாக ஒலிக்கிறது. 'இன் னும் குழந்தைகளாகத்தா னிருக்குதுகள் என்ர பிள்ளைகள்' —என்று எண்ணும்போது கண பதிப்பிள்ளைக்குச் சிரிப்பு வரு கின்றது. இடையிடையே மனைவி யின் குரலும் கேட்கின்றது.

''அம்மா இண்டைக்கு அப்பா வேலைக்குப் போகேல்லியா?''

''இண்டைக்குப் போகேல்ல... ஈஸ்வரி விசயமா உங்கட மாமா வீட்ட போகோணும் எண்ட துக்காக இண்டைக்கு வேலைக் குப் போகேல்ல!''

''எங்கட வீட்டில இன்னும் கொஞ்ச நாளில ஒரு கலியா ணம் நடக்கப் போகுது எண்டு சொல்லுறு...!'' என்றவாறு ஈஸ்வரியைப் பார்க்கிறுன். அவள் புன்சிரிப்புடன் முகத் தைத் தாழ்த்திக் கொள்கிறுள்.

''ஓ! எங்கட வீட்டிற்கு ஒரு புது விருந்தாளி வரப் போகிருரா... அக்கா!''—என்று விசமத்துடன் ஈஸ்வரியைக் கிண்டல் செய்கிருள் விஜயா.

''இல்லே... இல்லே... எனாகொரு மச்சான் வரப்போகிருர்• ஈஸ்வரிக்கு கல்யாணம் முடிந்ததும் அடுத்தது உனக்குத்தான்!''

''ம்... ம்... பாரம்மா... இந்த அண்ணனை!''

''முதலில் அக்காவின்ர கல்யாணம் நல்லபடியா நடக்கட்டும். பேந்து தங்கச்சியின்ர கல்யாணத்தைப்பற்றி யோசிக்கலாம்!...''

''என்னம்மா சொல்லுரு நீ...! கனகுக்கு ஈஸ்வரியில விருப்பம் தான!...''

''பிள்ளைக்கு விருப்பமெண்டக் போதுமா? பெற்ருேர் சம்மதிக்க வேண்டா?''

''ஏனம்மா மாமா மாமிக்கு இதில் விருப்பமில்லேயா? முந்தி வீட்டுக்கு வரேக்கயெல்லாம் ஈஸ்வரிக்குத்தான் கனகு எண்டு பகிடி பண்ணுவினமே!''

''ஏதோ சந்தோஷத்தில கதைக்கிறதெல்லாத்தையும் உண்மை எண்டு எடுக்கலாமா?... எல்லாம் அவன்ர எண்ணப்படி தான நடக்கும். அவன் என்ன நிணைச்சிருக்கிருனே? அதோட இப்ப அவையின்ர வீட்டிற்கு பெரிய இடத்திலிருந்து எல்லாம் சம்பந்தம் போகுதாம். அதால தான் அப்பா அடுத்த வருடம் ஈஸ்வரியின்ரை கல்யாணத்தைப் பற்றி நினைக்கலாம் எண்டு இருந்தவர்... இதைக் கேள்விப்பட்டோடன... உடன இதை முடிக்கோணும் எண்டு நிக்கிருர்!...''

''அதுசரி யம்மா!... அப்பாவின்ர கையில ஒரு காசுமில்லப் போல கிடக்குது... அப்ப என்னண்டு இதை நடத்த முடியும்?''

''ஏதோ முதலில அவையின்ர சம்மதத்தைக் கேட்டிட்டு... பேந்து பின்ன யாரிட்டயாவது கடனைக் கிடனைப் பிரட்டலாம் எண்டு இருக்கிருர்.''

அடுப்படியில் அமைதி நிலவுகின்றது. அந்த அமைதியைத் தாங்க மாட்டாதவராக கணபதிப்பிள்ளை குரல் கொடுக்கிருர்:

''என்ன இன்னுமா சிவராசா சாப்பிட்டு முடியேல்ல. ஒரு அவசர காரியத்திற்கு இந்த வீட்டில ஒண்டும் செய்யேலா...''

சிவராசா அவசரம் அவசரமாக வெளியே வருகின்ருன்.

''என்னப்பா!...''

''உனக்கு எல்லா விசயத்தையும் அம்மா சொல்லி யிருப்பா. நான் சிவபாதம் வீட்ட ஈஸ்வரி

யின்ர விசயமா போயிட்டு வாறன். கல்யாண விசயம் சரிப்பட்டு வந்தா கொஞ்சம் காசு தேவைப்படும். அதால உன்ர முதலாளியிட்ட கொஞ்சம் காசு கேட்டுப் பாரன்,''

அவன் திடுக்கிட்டுப் போகிருன்.

''நான் நினைக்கேல்ல அப்பா அவர் தருவார் எண்டு!''

''ஏன்?''

''.........''

''ஏன் தரமாட்டார். நீ இப்படி நினைச்சுக் கொண்டு பேசாம இருந்திராத... எதுக்கும் அப்பா கேக்கச் சொன்னவர் எண்டு கேள். என்ன பேசாம இருக்கிரு... அக்காவின்ர கல்யாணம் ஒப்பேறதில உனக்கும் பங்குண்டு எண்டதை நல்லா மனதில வைச்சுக் கொள். இதைச் சொல்லத்தான் இவ்வளவு நேரமும் நிண்டனுன். நான் சொன்னதை மறந்திராதை. அப்ப நான் வரட்டே?...'' என்ன இறுதி வார்த்தையை உரக்க வீட்டிலெல்லாருக்கும் கேட்கும் வண்ணம் கூறிவிட்டு வெளியேறுகிருர்.

அவனுக்குத் தலையைச் சுற்றிக் கொண்டு வருகிறது.

—தொடரும்.

ஈழத்தில் தயாரான இரண்டாவது படமான 'கடமையின் எல்லை' வெளியானதிலிருந்து அனைவரும் உள்நாட்டுத் திரைப் படங்கள் பற்றியே பேசுகின்றனர். இந்தச் சூழ்நிலையிற்ருன் திரு. எஸ். டி. அரசு 'கலைச் செல்விக்கு' ஒருவிஷேட பேட்டி தந்திருக்கிருர்.

ஈழத்தின் முன்னணிக் கலைஞர்களில் ஒருவரான எஸ். டி. அரசு 'கடமையின் எல்லை'க்கு உதவி டைரக்டராகப் பணிபுரிந்ததோடு படத்திலும் நடித்திருக்கிருர்.

அவரின் கருத்துக்கள் இதோ:-

கே: படத்துக்கு 'ஹெம்லெட்' தெரிவு செய்யப்பட்டதற்கு ஏதேனும் காரணமுண்டா?

பதி: டைரக்டர் திரு. வேதநாயகம் சேஷ்க்பியரின் நாடகங்களில் ஈடுபட்டுள்ள ஒரு விரிவுரையாளர் என்பதே காரணம்.

கே: கடமையின் எல்லை ஏன் ஓடவில்லை?

பதி: அப்படிச் சொல்ல முடியாது. யாழ்ப்பாணத்தில் 10 தினங்களுக்குமதிகமாக ஓடியிருக்கிறது. படம் ஓரளவுக்கு வெற்றி என்றே கூறவேண்டும்.

கே: ஜனரஞ்சகத் தன்மையை பெறப் படம் தவறிவிட்டதை ஏற்றுக்கொள்கின்றீர்களா?

பதி: ரசிகர்களைப் பொறுத்தளவில் பல குறைகளிருக்கலாம். ஏனெனில் அவர்கள் மிகமிக முன்னேற்றமடைந்துள்ள சினிமா உத்திகளையெல்லாம் எதிர்பார்த்தார்கள். ஆனுல்

# திரை விருந்து......

ஈழத்துத் தமிழ் சினிமா உலகம் குழந்தையாகவே இருக்கிறது.

கே: நடிகைகள் ஏன் சோபிக்கவில்லை?

பதி: பெண்களைப் பொறுத்த மட்டில் நடிக்கத் தயார் என்று வந்தவர்கள் அவ்வளவுதான். எதிர்காலத்தில் ஆர்வமுள்ள பெண்களெல்லாம் முன்வருவார்களென எதிர்பார்க்கிறேன்.



கே: கடமையின் எல்லை 'நட்சத்திரங்கள்' பத்திரிகைகளிற் கருத்துத் தெரிவித்திருந்தார்களே அதைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

பதி: டைரக்டர் வேதநாயகம் என்ன காரணத்துக்காக அவர்களைப் 'பிடித்துப் போட்டு' அவர்களுக்காகப் பாடுபட்டாரோ அவர்களே அவருக்கெதிராகச் சவால் விடுகிறார்கள். மறுப்புத் தெரிவிக்கவோ, காரணம் கூறவோ திரு. வேதநாயகம் இல்லாதபோது இவர்கள் இப்படிச் செய்வது மகா மட்டமான செயல்.

கே: வேறு படங்களில் நடிக்கின்றீர்களா?

பதி: டாக்ஸி டிரைவரிலும் நடித்துள்ளேன். அது நன்றாக விருக்கும். அத்தோடு ஈழத்துத் தமிழ்ப்படம் இவ்வளவுதானு என்று கேட்டுக்கொண்டிருப்பவர்களுக்கு நிச்சயம் அது நல்ல விடையளிக்கும்.

இத்தனை பொறுப்போடும் தேசிய உணர்வோடும் பேட்டியளித்த திரு. எஸ். டி. அரசு ஈற்றில்:

''கடமையின் எல்லையில் தெரிந்தோ தெரியாமலோ சில தவறுகள் ஏற்பட்டிருக்கலாம். அதை மட்டுமே நாம் பெரிது படுத்தக் கூடாது. எவ்வளவு முன்னேற்றம் கண்டிருக்கிறோம் என்பதை மட்டுமே அவதானிக்க வேண்டும். இன்றைய நிலையில் நம் படத்தொழிலைப் பிற நாட்டோடு ஒப்பிடுவது தவறு'' என்று கூறிமுடித்தார்.

—கே. ஆர்.

# இதோ ஒரு பத்திரிகை

*

ஈழத்திலே தமிழ்ப் பத்திரிகைகளின் தொகை மிக மிகக் குறைவே! இதனுல்தான் ஈழ நாடு மிகவும் பின்தங்கி இருக்கிறது. இக்குறையைத் தீர்க்கும் பொருட்டு இதோ 'ஈழ முரசு' வெளியாகியிருக்கிறது.

இப்பத்திரிகை பதினுெரு அங்குல நீளமும் எட்டரை அங்குல அகலமும் கொண்டது. எட்டுப் பக்கங்கள். விலை உள்நாடு பதினைந்து சதம், வெளிநாடு இருபது சதம். 'ஈழமுரசு' பற்றி இதோ விளம்புகின்றேன்.

**முதலாம் பக்கம்**

மேல் பக்கத்தில் கொட்டை எழுத்தில் 'ஈழமுரசு' என்று எழுதப்பட்டிருக்கிறது. அத்துடன் ஆசிரியர் துணையாசிரியர் பெயர்கள், பத்திரிகையின் விலை, பத்திரிகையின் முகவரி, ஆங்கில தமிழ்த் திகதிகள், மலர் ஒன்று, இதழ் ஒன்று என்பனவும் காணப்படுகின்றன. அடிப்பக்கத்தில் அரசியல் கலை இலக்கியத் திங்கள் ஏடு என எழுதப்பட்டிருக்கிறது. இடைப்பக்கத்தில் ஒரு பிரபல தலைவரின் ஆசிச் செய்தி அன்னாரது புகைப்படத்துடன் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

**இரண்டாம் பக்கம்**

இரண்டாம் பக்கம் முழுவதும் பத்திரிகை தோன்றப் போகிறது என்பதை அறிந்ததும் பத்திரிகை ஆசிரியருக்கு மக்களிடமிருந்து வந்த ஏராளமான கடிதங்களில் இடநெருக்கடி காரணமாகச் சிலவற்றை மட்டும் தந்துள்ளார்கள்.

**மூன்றும் பக்கம்**

ஒரு விளம்பரம் கால் பக்கத்தை விழுங்கிவிடுகிறது. மற்றைய முக்கால் பக்கத்திலும் ஒவ்வொரு ஊர்களிலும் நியமிக்கப்பட்ட விற்பனையாளர்களின் முகவரிகள் கொடுக்கப்பட்டுள்ளன.

**நகைச்சுவைக்**

**நான்காம் பக்கம்**

அரைப் பக்கத்தில் இரண்டு விளம்பரங்கள் இடம் பெற்றுள்ளன. மிகுதி அரைப்பக்கத்தில் ஆசிரியர் தலையங்கமாக பத்திரிகையின் தோற்றத்துக்கான காரணமும் அதன் வருங்கால இலட்சியங்களும் கூறப்பட்டுள்ளன.

**ஐந்தாம் பக்கம்**

ஐந்தாம் பக்கத்திலும் இரண்டு விளம்பரங்கள் அரைப் பக்கத்தை அலங்கரித்துள்ளன.

ஏனைய அரைப் பக்கத்தில் 'ஈழ முரசு' சந்தா விபரமும்; அடுத்த இதழில் என்னென்ன அம்சங்கள் இடம் பெறுமென்றும், யார் யார் அவைகளை எழுதுகிருர்கள் என்ற விபரங்களும்; கதை, கட்டுரை, கவிதைகள் தேவைப் படுகின்ற தென்றும்; அவைகளை அனுப்ப வேண்டிய முகவரி போன்ற விபரங்களும் தரப் பட்டுள்ளன.

**ஆறும் பக்கம்**

ஆறும் பக்கத்தில் ஒரு விளம் பரம் கால் பக்க அளவில் பிரசு ரிக்கப்பட்டுள்ளது. மிகுதிப் பக் கத்தில் அடுத்த இதழில் கேள்வி —பதில் ஆரம்பமாகுமென்ற

## கட்டுரை

விபரத்துடன் கேள்வி கேட்பவர் கள் அஞ்சல் அட்டையில் வெட்டி ஒட்டுவதற்கான கூப்பனும், சிறுவர் பகுதிக்குச் சிறுவர்கள் முதலில் அங்கத்தவராவதற் குரிய கூப்பனும் இடம் பெற் றிருக்கின்றன.

**ஏழாம் பக்கம்**

மூன்று விளம்பரங்கள் ஏழாம் பக்கத்தின் முக்கால் பகுதியை மூடிவிடுன்றன. கால் பக்கத் தில் பத்திரிகை தொடங்கப் போகிறது என்பதை அறிந்து பத்திரிகை வளர நிதி உதவி செய்தவர்களின் பட்டியல்.

**எட்டாம் பக்கத்தில்**

எட்டாம் பக்கத்திலும் இரண்டு விளம்பரங்கள் போட் டிருக்கிருர்கள். மேற் பக்கத் தில் (கோட்டுக்கு மேல்) தலை மைத் தபால் நிலையத்தில் செய் திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்ட சங்கதியும், அடிப்பக்கத்தில் (கோட்டுக்குக் கீழ்) பத்திரிகையின் முகவரி, ஆசிரியர் துணையாசிரியர் பெயர், முகவரிகள் போன்ற விபரங் களும் காணப்படுகின்றன. மிகுதி இடைவெளியில் பாரதி கவிதைகளிலிருந்து ஒரு கவிதை மறுபிரசுரம் செய்யப்பட்டுள் ளது.

*சரி!*— எப்படியும் ஒரு பத்தி ரிகை வாங்கவேண்டு மெனத் தீர்மானித்து விட்டீர்களா? ஆனல் ஒன்று. நீங்கள் வாங்கி னுலும் சரி வாங்கா விட்டாலும் சரி 'ஈழமுரசு' முதல் இதழைப் பொறுத்த வரை பத்திரிகைக்கு நயமே! ஏன் என்ருல் பத்தி ரிகை வெளியிட ஏற்பட்ட செலவைவிட விளம்பரங்களா லும் நன்கொடையாலும் வந்த பணம் இரண்டு மடங்கு அதிகம் பாருங்கோ. ●

**பொ. சண்முகநாதன்**

# எழுத்தாளர்க்கு மட்டுமல்ல

ஈழத்து இலக்கிய உலகிலே தற்போதுநிலவும்விழிப்புணர்ச்சி இதுவரை சாதிக்காத பல அற்புதங்களைச் சாதிக்கும் என்ற நம்பிக்கை துளிர்விடுகின்றது. அச்சக வசதியீனமென்ற பாறுங் கல் தேய்வடைந்து வருவதும் இதற் குதவுகின்றது.

இந்த இலக்கிய நம்பிக்கைக்கு ஒரு மகத்தான உதாரணமாக எதைக்காட்டலாம் தெரியுமா......? யாழ்ப்பாணத்தில்

**பேனா முனை**

எத்தனை பத்திரிகைகள் வெளி வருகின்றன? ஆமாம், நான்கு சஞ்சிகைகள்! எவரை நம்பி இத்தனையும் நடாத்தப்படுகின்றன? எங்களின் இலட்சியத் தாகத்தையும் இதய நம்பிக்கை யையுமே நம்பி வெளியிடப் படுகின்றன என்றால் இது ஒரு மகத்தான சாதனைதான். இதன் எதிரொலிகளும், பலாபலன் களும் இன்றல்ல இன்னமும் பல வருடங்களின் பின்னரே அறு வடையாகும். அன்று உலகமும் பேசும்.

விஷயத்துக்கு வந்தால்... சமீபத்தில் ஈழத்தில் இரு நாவல்கள் வந்திருக்கின்றன. அவற்றை விடுத்து தமிழகம் போய்வருவோம். அது பொருத் தமானதாயிருக்கும்.

ஈழத்து இலக்கியப் படைப்பு களின் தரத்தைக் குறைத்து மதிப்பிடும் ''புள்ளி''கள், 'கல்கி' வெள்ளி விழா போட்டி யிற் பரிசுபெற்ற கதைகளை ஒரு தடவை வாசிக்க வேண்டுமாய்த் தயைகூர்ந்து கேட்கின்றேன்.

'கல்கி' இருபத்தைந்தாண்டு செய்த சேவை பெரியது. அது ஏற்பாடு செய்த போட்டி மிகப் பொறுப்பானது. தமிழ் இலக்கியத்தின் இன்றைய தரத்தை உலக இலக்கிய அரங் கில் நிர்ணயம் செய்யத் தக்கது —செய்ய வேண்டியது. அதற் காகத் தன்கடமையைச்சரியாகச் செய்யவென்று பஞ்சாயத்தார் களை நியமித்தது கல்கி. அதில் —ஆமாம் சிறந்த எழுத்தாள ரென எல்லாரும் போற்றும்

**ஈழத்து நூல்களை**

வாசகர்களும் படியுங்கள்

கு. அழகிரிசாமி, பி. எஸ். ராமையா போன்றவர்களும் அங்கம் வகித்தார்கள். இவர்களை நாம் நம்பினேம் நடந்ததென்ன? ஏனிந்தவேதனை எமக்கு? இருபத்தைந்து வருட 'நிழலை' அந்தக் கதைகளின் பின்னணியில் நாம் எதிர்பார்க்கக் கூடாதா? கால் நூற்றுண்டு இலக்கிய வீறு எப்படி யெல்லாம் அமைந்திருக்க வேண்டும் அந்தக் கதைகளில் .........?'

பஞ்சாயத்துக்கே ஒரு பஞ்சாயத்தார் இருந்தார்களாம் 'கல்கி' ஆசிரியர் குழுவினரில்; அவர்கள் 'பெரும்' உதவி புரிந்தார்களாம். என்ன விநோதம் பாருங்கள். பஞ்சாயத்தார்க்கு முன்பே பஞ்சாயத்து 'பண்ணிய' அந்தக்குழுவினர் 'குமுதம் விசிறி'களா என்ன? — அவர்களுக்கு இலக்கியத்தரமானவை 'தன்மயமாகாமல்' நொடி, துணுக்கு, செய்திக் கதைகள் பிடித்திருக்கும். அதை அப்படியே 'அலாக்காகத் தூக்கி' (நாம் நம்பினேமே) இவர்களிடம் கொடுக்க இவர்களும் அவற்றில் ஒரு பரபரப்பான 'சதக்' கதைக்குப் பண்ணிவிட்டார்கள் பஞ்சாயத்து. இன்று 'கல்கி' இருந்திருந்தால் நிறுத்தித்தானிருப்பாரோ உடனே கல்கியை......

அதுதான் போகட்டு மென்று இங்கே பார்த்தால் நமது சாகித்தியமண்டலம்! ஆக்க இலக்கியத்

எழுதுவது
'மை'

துக்கான ஆயிரம் கரன்சிகளை இன்னும் இருசிறுகதைக் காரருக்கும் சேர்த்து நான்குபேர்களுக்குமாக அப்பம் பிய்த்திருக்கலாம் என்பது அடியேனின் தாழ் பணிந்த கருத்து! (கருத்தாவது இதெல்லாம் மணிவாக்குகள். யார் கேட்கிறுர்கள் இதையெல்லாம்.)

சரி! சரி! இனி சிறந்த மூன்று கதைகளை எடுப்போமா?—ஒன்று விவேகியில் வெளியான '**நானும் ஒருவன்**' என்ற **க. பரராஜசிங்கத்தின் கதை**. ஏழ்மையால் தாழ்வுணர்ச்சிக்குட்பட்ட பிஞ்சு உள்ளம் ஒன்று இளமைத் துடிப்பின் வேகத்தால் உணர்

விலைகொடுத்து வாங்குங்கள்.


பேபி மார்க்
ஸ்பெஷல்
பானங்களையே
அருந்துங்கள்!
BABY BRAND
நவீன இயந்திரங்களினால் விலை
உயர்ந்த மூலப் பொருட்களைக்
கொண்டு சுகாதார முறைப்படி
சுத்தமாகத் தயாரித்தது.
தயாரிப்பாளர்கள் :
சுப்பிரமணியன் சோடாக் கம்பனி
வல்வெட்டித்துறை.
போன்: 97 ● தந்தி: SODA
கிளை:
ராஜு ஸ்ரோர்ஸ்
67, 69, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 372 தந்தி: ESVES

வுந்தலுக்காட்பட்டு செயல் படும் மன உணர்வின மென்மை மிக்க அந்த உள்ளமே கூறுவது போல அமைந்த அழகான கதை. பல்கலைக்கழகச் சிறுகதைப் போட்டியில் சரியாகத்தான் இந்தக் கதைக்கு முதற் பரிசைக் கொடுத்திருக்கிறுர்கள்.


அடுத்தது வீரகேசரியில் வந்த செம்பியன் செல்வனின் 'ஜகனி' என்ற கதை. நிறைமாதக் கர்ப்பிணி ஒருத்தியின் மென்மை மிக்க தாய்மை உணர்வை, அதற்கேயுரித்தான மிகுந்த இரக்க உணர்வுடன் ஈனுகின்ற பசுவைக் காட்டிச் சித்தரித்துள்ளார் அவர். கெட்டிக்காரர், மனதில் கதையைப் பதித்துவிட்டார். ஆனுல் வில்லங்கப்பட்டு உட்செலுத்தப் பட்டதைப் போல சில நிகழ்ச்சிகள் காணப்படுவது மிகமிகச் சிறு குறை.

மூன்றுவது... தேறவில்லை... சிறந்த 'பழைய' எழுத்தாளர் சிலரும் சாகித்திய முத்திரை எழுத்தாளர் ஒருவரும் எழுதியிருந்தும் ...... ? — 'முத்திரை' தந்த வளர்ச்சியைப் பார்ப்போமென்றுல் போயும் போயும் ஒரு கிழட்டுத் துணுக்கையா கதை பண்ணுவது ? அந்தோ! அந்தோ! இதுவே இப்படியென்றுல் மற்ற சாகித்திய சவால் வாதிகளும்கூட 'பண்ணியிருந்தால்' — எழுதியே இருந்தால்... ஐயோ! ஐயோ!

ஏன் சொல்ல மாட்டார் பகீரதன்? ●


## பல்கலைக் கழகத்துக்கு ஒரு 'முத்து'

சிறந்த இலக்கியச் சொற்பொழிவாளரும், அருமையான பேச்சாளரும் உன்னத தமிழ் விரிவுரையாளருமான பொன். முத்துக்குமாரன் B. O. L. அவர்கள் இம்மாதம் முதல் பேராதனை பல்கலைக்கழகத்தில் கடமையாற்றச் செல்கிறுர். ''சிலம்பின் சிறப்பு'' என்ற கட்டுரை நாலுக்கு இம்முறை சாகித்திய மண்டலப் பரிசு பெற்றுள்ள



பொன். முத்துக்குமாரனவர்கள் ''தமிழ் மரபு'!, ''செந்தமிழ் தேன்'', ''மாணவர் கட்டுரை''. ''இந்து சமய பாடம்'' முதலிய நூல்களின் ஆசிரியருமாவார். அவரின் தொண்டு தமிழ் கூறும் நல்லுலகிற்குப் பயன்பட வேண்டுமாய் வாழ்த்தி அனுப்புகிறோம்.

'கலைச் செல்வி'



R.V. கவுடர்
R.V.G. பீடிகள்
மேலானவை
ஒரு
சீரான
கலவை
RVG
R.V.G
R.V.GOWDER SONS, PALGHAT
தயாரிப்பாளர்கள்:-
R.V.G பீடிக் கம்பெனி,
34, மானிப்பாய் றோட், யாழ்ப்பாணம்.




ஆஹா! எவ்வளவு பிரகாசம்...!
ஆமாம், அது
எலக்ரோலக்ஸ்
புரியும்
நம்பிக்கையான
சேவை!
ஒப்பந்த
வேலைகள்
ஏற்றுக்கொள்ளப்படும்
எல்லாவித மின்சார உபகரணங்களுக்கும்
எலக்ரோலக்ஸ்
காங்கேசன்துறை வீதி, சுன்னாகம்

தூய்மையான ஆடை

கம்பீரத்தின் சின்னம்!

அதற்கு

# மில்க் வைற் சோப்




- ★ சிக்கனம் !
- ★ பளபளப்பு !
- ★ துரித [illegible]வை !
- ★ நீடித்த உழைப்பு !

## மில்க் வைற் என்பது திறமான சோப்

○

மில்க் வைற் நீல சோப், வெள்ளை சோப்,
நீல பார் சோப், வெள்ளை பார் சோப்
5 சத 10 சத கட்டிகள் என்பன
எங்கும் விற்பனையாகின்றன.

REGISTERED AS A NEWS PAPER AT THE G. P. O.

# லீலா! லீலா! லீலா!

எல்லா விதத்திலும் முன்னிற்கும்

## 1967

## லீலா பஞ்சாங்க சித்திரக் கலண்டர்
## லீலா டயறிகள்

பல வர்ணங்களிலும் பல தினிசுகளிலும்
தயாராகின்றன.

போயா தினங்களை இலகுவில்
பார்க்கக்கூடியதா யமைக்கப்பட்டது.

வியாபாரிகள் விலைப்பட்டியலுக்கு
உடனே எழுதுங்கள்.

யாழ்ப்பாணத்தில் கமிஷன் கழித்து
தொகையாய்க் கிடைக்குமிடம்:

**செ. ஆ. செல்லையா அன். கோ**

ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

ஏக விநியோகஸ்தர்கள்:

# லீலா ஸ்டோர்ஸ்

249, நொறிஸ் றோட், ★ கொழும்பு 11.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் ஸ்ரீ சண்முகநாத அச்சகத்தில் அச்சிட்டு,
மு. கனகராசனால் வெளியிடப்பட்டது.